
மலர்: 52 இதழ்:12 டிசம்பர் 2010 விலை ரூ.10

# திருக்கோயில்

இந்துசமய அறநிலையத்துறை வெளியீடு



ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீ ஆண்டாள்




சென்னை திருவொற்றியூர் அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயிலில் அருள்மிகு வடிவுடை அம்மனுக்கு 8 கிலோ தங்கத்தில் சுமார் ரூ.1.80 கோடி செலவில் செய்யப் பெற்ற தங்கத் தேர் வெள்ளோட்ட விழாவினை கடந்த 19.11.2010 அன்று மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு. கேஆர். பெரிய கருப்பன் அவர்கள் தொடங்கி வைத்தார் கள். மேலும் திருக்கோயில் வளாகத்தில் ரூ.35 லட்சம் மதிப்பீட்டில் கட்டப் பெற்ற சிலைகள் பாதுகாப்பு மையத்தினையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

விழாவில் மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் திரு. கே.பி.பி.சாமி, இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் திரு. ப.ரா.சம்பத், இ.ஆ.ப. இணை ஆணையர் [திருப்பணி] திருமதி. சி.ஹரிப்ரியா, சென்னை மண்டல இணை ஆணையர் திரு. பி.வாசுநாதன், திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில் துணை ஆணையர் / செயல் அலுவலர் திரு.பொ.ஜெயராமன், துணை ஆணையர் [கல்வி [ம] தொண்டு நிறுவனங்கள்] திருமதி இரா.வான்மதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

விழாவிற்கான ஏற்பாடுகளை இத்திருக்கோயிலைக் கூடுதல் பொறுப்பாக கவனிக்கும் சென்னை அருள்மிகு வடபழனியாண்டவர் திருக்கோயில் துணை ஆணையர் / செயல் அலுவலர் திருமதி த.காவேரி சிறப்பாக செய்திருந்தார்.




திருக்கோயில்

# சிறப்பாசிரியர் பக்கம்



தமிழ்மொழிக்கும், தமிழர்தம் வாழ்க்கை நெறிக்கும் ஏற்றம் தந்த நாலாயிரத் திவ்விய பிரபந்தமெனும் திராவிட வேதத்தை அருளிச் செய்த பன்னிரு ஆழ்வார்களைப் போற்றி, நாளும் தெய்வத் தமிழ் வளர்க்கும் பூலோக வைகுண்டமெனும் திருவரங்கம் பெரிய கோயிலில் ஆண்டு தோறும் தனிவிழா எடுத்து கொண்டாடப்படும் என தமிழக அரசு ஆணை பிறப்பித்தது. அவ்வறிவிப்பைத் தொடர்ந்து, கடந்த 13.11.2010 அன்று திருவரங்கத்தில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், அரசு உயர் அதிகாரிகள், வைணவத்தில் ஆழங்கால்பட்ட அறிஞர்கள் பங்கேற்ற ஆழ்வார்கள் விழா வெகு சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. அவ்விழா குறித்த செய்தித் தொகுப்பு வாசகர்களின் பார்வைக்குத் தரப் பெற்றுள்ளது.

இவ்விதழில் ஸ்ரீபெரும்புதூர் ஸ்ரீ எம்பார் ஜீயர் ஸ்வாமி, பேராசிரியர் வை.இரத்தின சபாபதி, ஸ்வாமி, புகழ்பெற்ற மகப்பேறு மருத்துவர் டாக்டர் கமலா செல்வராஜ், டாக்டர் பருத்தியூர் கே.சந்தானராமன், தொல்லியல் அறிஞர் கி.ஸ்ரீதரன், சிவநெறிச் செம்மல் பூசை. ச. அருணவசந்தன் முதலான அறிஞர் பெருமக்களின் கருத்தாழமிக்க படைப்புகள் வெளியாகியுள்ளன. படித்து இன்புறுங்கள்.

மார்கழி மாதம் இறைவழிபாட்டிற்கு உகந்த சிறந்த மாதமாகும். கண்ணபிரான் கீதையில் 'நான் மாதங்களில் மார்கழி மாதமாய் இருக்கிறேன்' என்றார். பாவை பாடிய கோதை ஸ்ரீ ஆண்டாளும் 'மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாள்' என்றாள். இந்த மார்கழித் திங்களில்தான், எல்லா சிவாலயங்களிலும், சிறப்பாக பூலோக கைலாசமாகிய சிதம்பரத்தில் (22.12.2010) திருவாதிரை திருவிழாவும், எல்லா வைணவத் தலங்களிலும், சிறப்பாக பூலோக வைகுந்தமாகிய திருவரங்கத்தில் (17.12.2010) வைகுண்ட ஏகாதசி திருவிழாவும் நடைபெறவுள்ளன. பக்தர்கள் சிவனையும், திருமாலையும் வழிபட வாருங்கள் என அன்போடு அழைக்கிறோம்.

ப.ரா.சம்பத்

(ப.ரா.சம்பத், இ.ஆ.ப.)
ஆணையர்

# திருக்கோயில்

இந்து சமய அறநிலையத்துறை வெளியீடு

நிறுவிய ஆண்டு : 1958
திருவள்ளுவர் ஆண்டு : 2041
கார்த்திகை – மார்கழி
டிசம்பர் – 2010
மலர் : 52 இதழ் :12

சிறப்பாசிரியர் (ம) வெளியிடுவோர்
திரு.ப.ரா.சம்பத், இ.ஆ.ப.
ஆணையர்
இந்து சமய அறநிலையத் துறை
நுங்கம்பாக்கம். சென்னை – 600 034

ஆசிரியர்
தென்னம்பட்டு ஏகாம்பரம், எம்.ஏ.,

ஆணையர் அலுவலகம்
இந்து சமய அறநிலையத்துறை
119 உத்தமர் காந்தி சாலை
நுங்கம்பாக்கம் சென்னை – 600 034.
தொலைபேசி எண்:
28334811/12/13
மின் அஞ்சல்
tn.endowments@gmail.com

அச்சிடுவோர்
சென்னை மைக்ரோ பிரிண்ட் (பி) லிமிடெட்
130, (ப.எண் 34) நெல்சன் மாணிக்கம்
சாலை, அமைந்தகரை.
சென்னை – 600 029
தொலைபேசி எண் : 2374 0099

சந்தா விபரம்
தனி இதழின்விலை ரூ. 10/–
ஓராண்டு சந்தா ரூ. 120/–
ஐந்தாண்டு சந்தா ரூ. 500/–
பத்து ஆண்டு சந்தா ரூ. 1000/–
ஆயுட்காலச்சந்தா ரூ. 1500/–

(ஆயுட்காலம் என்பது அதிகபட்சமாக 15 ஆண்டுகள் மட்டும்)


## இதழின் உள்ளே...


திருவரங்கத்தில் ஆழ்வார்கள் விழா
– செய்தித் தொகுப்பு –3

டாக்டர் கமலா செல்வராஜ்
வைகுண்ட ஏகாதசி விரதம் –7

ஸ்ரீபெரும்புதூர் ஸ்ரீ எம்பார் ஜீயர் ஸ்வாமி
ஆழ்வார்கள் அரங்கம் –9

பேராசிரியர் முனைவர்
வை. இரத்தின சபாபதி
திருமுறைகள் காட்டும் வாழ்வியல்– 12

ஸ்வாமி
சூடிக்கொடுத்த சுரும்பார் குழலி –16

சிவமஞ்சரி செம்மல்
பூசை.ச. அருண வசந்தன்
அணியுடைய ஆதிரைநாளும்
அழகிய விடங்கரும் –19

ம. இராஜகோபாலன்
அன்பில் வடிவழகிய
நம்பி திருக்கோயில் –21

டாக்டர் பருத்தியூர் கே. சந்தானராமன்
ஆடவல்லானும் ஆதிரைச் சிறப்பும் –23

எம்.என்.ஸ்ரீனிவாசன்
வைகுண்ட ஏகாதசி –26

கவிஞர் சீ.சோதி
வள்ளலார் கண்ட நாவுக்கரசர் –28

தொல்லியல் அறிஞர்
கி.ஸ்ரீதரன்
திருவாஞ்சியம் திருக்கோயில் –33

எஸ். சாயிராமன்
மனித வாழ்க்கையும்,
சிவ ஸ்தலங்களும் –35

தென்னம்பட்டு ஏகாம்பரம்
சொல்லக்கேள் ஞானவழி –38



# திருவரங்கத்தில் ஆழ்வார்கள் விழா செய்தித் தொகுப்பு

## ஆழ்வார்கள் – ஓர் அறிமுகம்

தமிழ்நாட்டில் பண்டைய நாள்தொட்டு இன்று வரை சிறப்புற்று விளங்கும் சமயங்கள் சைவமும், வைணவமும் ஆகும். திருமாலைப் பரம் பொருளாகக் கொண்டு வழிபடும் சமயமே வைணவமாகும்.

இயற்கையை வழிபட்டுக் கொண்டிருந்த பண்டையத் தமிழர்கள் இறைவனை வழிபட முனைந்தபோது அழகின் திருவுருவாய் திருமாலை வழிபடலாயினர். மிகப் பழமையான தொல்காப்பியத்தில் காணும் 'மாயோன் மேய காடுறை உலகமும்' எனும் நூற்பாவில் காடுகள் சார்ந்தது முல்லை நிலம் எனவும் அங்கு வாழும் மக்கள் வழிபடும் கடவுள் மாயோன் அதாவது திருமால் எனவும் வழங்கப்பெற்றது.

சங்க காலத்திலும், அதையொட்டிய காலத்திலும் முல்லை நிலக் கடவுளாக இருந்த திருமால் வழிபாடு, கி.பி.600 முதல் 900 வரையிலான பல்லவர் ஆட்சி காலத்தில் தமிழகத்தில் தோன்றிய பக்தி இயக்கத்தின் வாயிலாக சைவமும், வைணவமும் மாபெரும் மறு மலர்ச்சியைப் பெற்றன. இந்தக் காலக் கட்டத்தில் நிகழ்ந்த மாபெரும் சமய மறுமலர்ச்சியை முன்னின்று நடத்தியவர்கள் சிவனடியார்களான நாயன்மார்களும், வைணவ அருளாளர் களான ஆழ்வார்களுமே ஆவர்.


தங்கள் இறையனுபவத்தையும், பக்திக் கனிவையும் ஈரத் தமிழிற் பாடித் தமிழகத்தில் திருமால் நெறியை– வைணவ சமயத்தை நிலை நிறுத்திய பெருமக்கள் ஆழ்வார்களே ஆவர்.

'வேறொன்றில் கண் வையாதே பகவத் குணங்களில் ஆழங்காற்பட்ட மால் உகந்த ஆசிரியர்கள்' என ஆழ்வார்கள் போற்றப்பட்டனர். இங்ஙனம் இறைவனுடைய திருக்குணங்களிலும், வடிவழகிலும் ஆழ்ந்து ஈடுபட்டு, எம் பெருமானால் மயர்வற மதிநலம் அருளப் பெற்றவர்கள் ஆழ்வார்கள்.

அவர்கள் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார்,




**விழாமேடையில் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் திரு. மகேசன் காசிராஜன் இ.ஆ.ப. மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், திரு.என். செல்வராஜ், திரு. கே.ஆர். பெரியகருப்பன், திரு.கே.என். நேரு, மாநகராட்சி மேயர் திருமதி. எஸ். சுஜாதா, அறங்காவலர்குழுத் தலைவர் திரு. பெ.கி. தியாகராஜன்.**



**மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திரு.கே.ஆர். பெரியகருப்பன்**

பேயாழ்வார், திருமழிசையாழ்வார், நம்மாழ்வார், மதுரகவியாழ்வார், குலசேக ராழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், தொண் டரடிப் பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார் எனப் பன்னிருவர் ஆவர்.

அவர்கள் தங்கள் உள்ளத்தே உள்ளடங் காது கசிந்த இறையனுபவத்தையும், பக்தி உணர்வையும் உலகை உய்விப்பதே நோக்கமாகக் கொண்டு ஈரத் தமிழில் பாடிய அமரத் தன்மை கொண்ட நாலாயிரம் பாசுரங்களே அருளிச் செயல் எனப்படும் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தமாகும்.

வைணவர்கள் திவ்வியப் பிரபந்தத்தை வேதமாகவே போற்றியும், பாராயணம் செய்தும் வருகிறார்கள், 'தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றோமே' என்றாற்போல வேதத்தில் தெளிவு படாத இடங்களுக்குத் திவ்வியப் பிரபந்தம் தெளிவு பெறும்படி செய்கிறது என்பர்.

ஆழ்வார்கள் அடிச் சுவட்டைப் பின்பற்றி வைணவ நெறி வளர்த்த ஸ்ரீநாதமுனிகள் தொடங்கி மணவாள மாமுனிகள் வரையிலான குரு பரம்பரையின் மையமாகத் திகழ்ந்த ஸ்ரீ இராமாநுஜர், ஆழ்வார்களின் அருளிச் செயலில் தோய்ந்து விசிஷ்டாத் வைதம் எனும் வைணவ சித்தாந்தத்தைத் தோற்றுவித்து வைணவத்தை உலகறிய பிரசித்தி பெறச் செய்தார்.

## ஆழ்வார்கள்விழா

கோவையில் செம்மொழி மாநாடு, தஞ்சையில் தஞ்சைப் பெரிய கோயில் ஆயிரமாவது ஆண்டு நிறைவு விழா என தமிழ்மொழி, கலை, கலாச்சார, பண்பாட்டுத் திருவிழாக்களைச் சீரும் சிறப்புமாய் நடத்திய **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்** சாதி, ஆசார அனுஷ்டானங்களைப் புறந்தள்ளி தெய்வத் தமிழையும், சமத்துவத்தையும் முதன்மைப்படுத்திய ஆழ்வார்களைப் போற்றி சீரும் சிறப்புமாக அரசு விழா நடத்திட வேண்டுமென உத்திரவிட்டார்கள்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தர விற்கிணங்க,ஆழ்வார்கள் பன்னிருவருக்கும் திருச்சிராப்பள்ளி, திருவரங்கம், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலில் ஆண்டிற்கு ஒருமுறை ஒரு நாளில் அரசுவிழா மிகச் சிறப்பாக நடத்தப்படும் என 2010–11ஆம் ஆண்டு இந்து சமய அறநிலையத்துறை மானியக் கோரிக்கையின்போது, மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் சட்டப் பேரவையில் அறிவித்ததைத் தொடர்ந்து பூலோக வைகுண்டம் எனப் போற்றப்படும் திருவரங்கத்தில் கடந்த **13.11.2010** அன்று தமிழக அரசின் சார்பில் ஆழ்வார்கள் விழா சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

ஆய்வரங்கின் நிறைவு விழா மாலை




**ஆய்வரங்கில் தொடக்கவுரை, ஸ்ரீ ஸ்ரீரங்க நாராயண ஜீயர் சுவாமிகள்.**

## விழா நிகழ்ச்சித் தொகுப்பு

கடந்த 13.11.2010 அன்று காலை, திருவரங்கம், அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில் வளாகத்தில் உள்ள ஆயிரங்கால் மண்டபத்தில் மங்கல இசையுடன் முதலாம் ஆண்டு ஆழ்வார்கள் விழா தொடங்கியது.

ஸ்ரீ ஸ்ரீரங்க நாராயண ஜீயர் சுவாமிகள், ஆழ்வார்கள் குறித்த ஆய்வரங்கத்தைத் தொடங்கி வைத்தார். பேராசிரியர் முனைவர் திரு ஏ.வி. ரெங்கச்சாரி அவர்கள் ஆய்வரங்கத்திற்கு தலைமை வகித்தார்.

| தலைப்பு | சொற்பொழிவாளர்கள் |
|---|---|
| பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் | முனைவர் எம்.ஏ,வேங்கடகிருஷ்ணன் |
| திருமழிசையாழ்வார் | முனைவர் நா. பாஸ்கரன் |
| நம்மாழ்வார் | முனைவர் தெ.ஞானசுந்தரம் |
| மதுரகவி ஆழ்வார் | திரு.ஆர்.நரசிம்மாச்சார்யார் சுவாமி |
| குலசேகர ஆழ்வார் | முனைவர் கி. சேகர் |
| பெரியாழ்வார் | முனைவர் தி. இராசகோபாலன் |
| தொண்டரடிப்பொடியாழ்வார் | புலவர் கோ. சாரங்கபாணி |
| திருப்பாணாழ்வார் | திரு. இரா. மாது |
| திருமங்கையாழ்வார் | திரு. இரா. அரசுமணியன் |
| ஆண்டாள் நாச்சியார் | முனைவர் ந. விஜய சுந்தரி |

ஆய்வரங்கில் பன்னிரு ஆழ்வார்களின் பெருவாழ்வையும், அருளிச் செயல் களையும் குறித்து வைணவத்தில் ஆழங்கால் பட்ட அறிஞர் பெருமக்கள் சொற்பொழிவாற்றினர்.

தொடங்கியது. விழாவிற்கு தலைமை தாங்கிய **மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு** அவர்கள் பன்னிரு ஆழ்வார்களின் திருவுருவப் படங்களைத் திறந்து வைத்தார்.

**மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்கள்** ஸ்ரீ வைணவம், ஆழ்வார்கள், அவர்கள் அருளிய நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம், திருவரங்கம் இவற்றின் பெருமை களைக் குறித்து பன்முக நோக்கில் அறிஞர் பெருமக்கள் வழங்கிய ஆய்வுக் கட்டுரைகள் அடங்கிய விழா மலரை வெளியிட, **மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு என்.செல்வராஜ் அவர்கள்** பெற்றுக் கொண்டார். **திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.மகேசன் காசிராஜன் இ,ஆ,ப. அவர்கள்** விழாவில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்.

வைணவ அறிஞர்கள் திரு. திருச்சி கல்யாணராமன், உ,வே.வேளுக்குடி கிருஷ்ணன் ஆகியோர் ஆழ்வார்கள் குறித்து சிறப்புரையாற்றினார்கள். இறுதியாக, மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் ஆழ்வார்கள் விழா தொடர்பாக பாசுரங்கள் ஒப்புவித்தல், சொற்பொழிவு, கட்டுரை ஆகிய போட்டிகளில் கலந்து கொண்டு தேர்வு பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கி விழாப் பேருரை நிகழ்த்தினார்கள்.

*"திருவரங்கம் முதலான வைணவ திவ்விய தேசங்கள் தமிழ் மற்றும் ஆன்மிக வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றியுள்ளன தமிழ் வளர்ச்சிக்கு திருக்கோயில்கள் சிறப்பிடம் வகித்துள்ளதால்தான், தமிழக அரசு திருக்கோயில்களுக்கு உயர் முக்கியத்துவம் அளித்து வருகிறது.*

*தமிழக அரசின் கடந்த நான்கரை ஆண்டுகால ஆட்சிக் காலத்தில் ரூ **450** கோடி செலவில் தமிழகத்தில் **5** ஆயிரம் சிறிய, பெரிய திருக்கோயில்களில் குடமுழுக்கு விழாக்கள் நடத்தப்பெற்றுள்ளன. இது தமிழக அரசின் சாதனைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.*





**ஆய்வரங்கில் பேராசிரியர் தெ.ஞானசுந்தரம், உ.வே. வேளுக்குடி கிருஷ்ணன்**

*ஸ்ரீரங்கம் திருக்கோயிலின் வழிபாட்டு முறைகளை ஏற்படுத்திய வைணவப் பெரியவர் இராமாநுஜர் சாதி வேறுபாட்டை நீக்க அரும்பாடு பட்டார். அன்று அவரது முயற்சிக்கு நல்ல பலன் கிடைத்தது. அவரைப் போலவே மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும் அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்று அறிவித்து அதை நடைமுறைப்படுத்த மேற்கொண்டுள்ள முயற்சிகளால் இராமாநுஜருடைய வழியில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மிகுந்த ஆர்வமும் அக்கறையும் கொண்டுள்ளார் என்பது எடுத்துக் காட்டாகத் திகழ்கிறது. இதனால் வாழும் இராமாநுஜர் என்று சொல்வதற்கு ஏற்றவராக மாண்புமிகு முதல்வர் திகழ்கிறார் என்பது தெளிவாகிறது" என்று விழாப் பேருரையில் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.*

*விழாவில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி* மேயர் திருமதி எஸ்.சுஜாதா, மாநகராட்சி ஆணையர் திரு.பால்சாமி. துணை மேயர் திரு.மு.அன்பழகன், ஸ்ரீரங்கம் மண்டலக்குழுத் தலைவர் திரு.த.குமரேசன், மாமன்ற உறுப்பினர் திரு கே. ரெங்கன், உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

விழாவிற்கான ஏற்பாடுகளைத் திருச்சிராப்பள்ளி மண்டல அறநிலையத்துறை இணை ஆணையர் திரு. மு.க. பாலசுப்பிரமணியன் , திருவரங்கம், அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில் அறங்காவலர்க்குழுத் தலைவர் திரு பெ.கி. தியாகராஜன் உள்ளிட்ட அறங்காவலர்கள், இணை ஆணையர்/செயல் அலுவலர் திரு.சி.ஜெயராமன், திருச்சிராப்பள்ளி மாவட்ட அறநிலையத்துறை உதவி ஆணையர் திரு சோ. கணேசன் ஆகியோர் சிறப்பாகச் செய்திருந்தனர்.

–தென்னம்பட்டு ஏகாம்பரம்






**ஆழ்வார்கள் விழா மலரை மாண்புமிகு அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் வெளியிட மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் திரு கே.என்.நேரு, என்,செல்வராஜ் ஆகியோர் பெற்றுக்கொள்கின்றனர். போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவிக்கு மாண்புமிகு அமைச்சர் பரிசளித்தல்**



# வைகுண்ட ஏகாதசி விரதம்

**டாக்டர் கமலா செல்வராஜ்,**
**ஜி.ஜி. மகப்பேறு மருத்துவமனை, சென்னை.**



ஏகாதசி, வளர்பிறையில் ஒருமுறை, தேய்பிறையில் ஒருமுறை என மாதத்தில் இரண்டு முறை வரும். ஏகாதசி விரதம் மிகவும் பிரஸித்தமானது. அதிலும் மார்கழி மாதத்தில் வரும் ஏகாதசி மிகவும் விசேஷமானதாகும். மார்கழி மாத, வளர்பிறை ஏகாதசியைப் பெரிய ஏகாதசி என்றும், பக்தர்களுக்கு வைகுண்டத்தையே தரும் புண்ணியத்தைத் தேடித் தருவதால் 'வைகுண்ட ஏகாதசி' என்றும் கூறுவர். மாத ஏகாதசிகளில் விரதமிருக்க முடியாதவர்கள் கூட, வைகுண்ட ஏகாதசி அன்று விரதமிருந்தால், எல்லா ஏகாதசிகளிலும் விரதமிருந்த பலனை அடைவர். வைகுண்ட ஏகாதசியன்று விரதமிருந்து, சொர்க்க வாசல் வழியாகச் சென்று, இறைவனைத் தரிசனம் செய்தால் முக்தி நிச்சயம். வைகுண்ட ஏகாத சியின் பெருமையை உணர்த்த இந்தக் கதை கூறப்படுகிறது. 'கம்பம் என்ற நகரை வைகானசன் என்ற அரசன் ஆண்டு வந்தான். ஒரு நாள் அவன் ஒரு கனவு கண்டான். கனவில் அவனது முன்னோர்கள் வந்து, "நாங்கள் இங்கு, நரகத்தில் சிக்கித் தவிக்கிறோம். எங்களை விடுதலை செய்"' என்று கூறிக் கண்ணீர் வடித்தனர். கண் விழித்த அரசன் என்ன செய்வதென அறியாமல் தவித்துப் போனான்.

மறுநாள் காட்டிற்குற் சென்று, அங்கு கடுந்தவம் புரிந்துகொண்டிந்த முனிபுங்கர் என்ற முனிவரை வணங்கி, தான் கண்ட கனவைக் கூறினான். தன்னுடைய முன்னோர்களை நரகத்திலிருந்து மீட்க உபாயம் கூறி அருளுமாறு வேண்டினான். உடன் முனிபுங்கர், "நீயும் உன் மனைவி மக்களும் வைகுண்ட ஏகாதசி விரதம் அனுஷ்டித்து அந்தப் பலனை உன் முன்னோர்களுக்கு அர்ப்பணம் செய்யுங்கள்" என்று கூறினார்.

அதன்படி அரசனும் அவன் மனைவி மக்களும் வைகுண்ட ஏகாதசி விரதமிருந்து, அதன் பலனைத் தங்கள் முன்னோர்களுக்கு அர்ப்பணித்தனர். அவர்கள் நரகத்திலிருந்து விடுபட்டு, சொர்க்கத்தை அடைந்தனர்.

வைகானசன் அதற்குப் பின்னும் வைகுண்ட ஏகாதசி விரதத்தை அனுஷ்டித்து வைகுண்டப் பதவியை அடைந்தான்.

வைகுண்ட ஏகாதசி விரதத்தை அனுஷ்டிப்பவர்கள் முதல் நாளான தசமி அன்று ஒரு வேளை மட்டுமே உண்ண வேண்டும். ஏகாதசியன்று உணவு உட்கொள்ளாமல் இருந்து, இரவு முழுவதும் விழித்திருக்க வேண்டும். ஏகாதசி அன்று முழுவதும் இறைவனின் ஸ்மரணையோடு இருக்க வேண்டும். நாராயணப் பெருமாளின் புகழ் பாடும் ஸ்லோகங்களையோ கதைகளையோ சொல்லிக் கொண்டும் கேட்டுக் கொண்டும் கண் விழித்திருக்க வேண்டும். மறுநாள், துவாதசியன்று சுண்டைக்காய், நெல்லிக்காய் மற்றும் அகத்திக்கீரை சேர்த்த உணவைப் பெருமாளுக்கு நைவேத்யம் செய்து, அந்த உணவை சாப்பிட்டு, அன்று பகலும் உறங்காமல் இருக்க வேண்டும். ஏகாதசி அன்று விரதம் இருக்கும் காரணத்தை விஞ்ஞான பூர்வமாகவும் விளக்கலாம்.

அமாவாசை அன்று சந்திரனும், சூரியனும் ஒன்றாக உதித்து ஒன்றாக மறையும். பௌர்ணமி அன்று சந்திரனும் சூரியனும் மிக விலகி இருக்கும். அமாவாசைக்கும் பௌர்ணமிக்கும் இடையே பதினைந்து நாட்கள் உள்ளன. ஒவ்வொரு நாளும் சந்திரன் சூரியனிடமிருந்து பன்னிரண்டு டிகிரி விலகி செல்கிறான். ஏகாதசி பதினொன்றாம் நாள் வருகிறது. அன்று சந்திரன் சூரியனிடமிருந்து நூற்றி முப்பத்திரண்டு டிகிரி (132 டிகிரி) தள்ளி இருப்பான். இந்தக் கோணத்தில் சந்திரனும், சூரியனும் இருக்கும் போது, புவிஈர்ப்பு சக்தி அதிகமாகும். இதன் பாதிப்பால் ஏற்படும் மாற்றங்களின் காரணமாக, அன்று வழக்கம் போல் உணவு சாப்பிட்டால் ஜீரணமாகாது. அதனால்தான், அன்று விரதம் நல்லது என முன்னோர்கள் கூறியுள்ளார்கள்.

விரதமிருப்பதால் உடம்பிலுள்ள கழிவுப் பொருட்களும், மிகுதியான கொழுப்புச் சத்தும் கரைந்து வெளியேறுகின்றன. அதற்குப் பின் உடலுக்குத் தேவையான வைட்டமின் சத்துக்களை துவாதசியன்று நைவேத்யமான அகத்திக்கீரை, நெல்லி ஆகியவை அளிக்கின்றன. ஆக, விஞ்ஞான பூர்வமாகவும் ஏகாதசி விரதமிருப்பது மிகவும் நல்லதாகும். அதுவும் வைகுண்ட ஏகாதசி விரதமிருப்பதால், எல்லாவற்றுக்கும் மேலான சுவர்க்கமே கிட்டும்படியான நற்பலன் உண்டாகும். ◈

# சேலம் மண்டலம்- நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா





சேலம் மண்டலம், சேலம் மாவட்டத்தில் ஒரு கால பூஜை நடைபெறும் திருக்கோயில்களில் பூஜை செய்யும் அர்ச்சகர் மற்றும் பூசாரிகளுக்கு இலவச மிதிவண்டிகள் வழங்குதல் மற்றும் ஆதிதிராவிடர்கள் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில்களுக்கு திருப்பணி நிதியுதவி வழங்குதல் ஆகியவற்றின் விழா கடந்த 03.11.2010 அன்று சேலம், நேரு கலையரங்கத்தில் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு.வீரபாண்டி எஸ்.ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது. விழாவில் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ஜெ.சந்திரகுமார் இ.ஆ.ப. சேலம் மாநகராட்சி மேயர் திருமதி. ஜெ.ரேகா பிரியதர்ஷினி, மாநகராட்சி ஆணையர் டாக்டர் கே.எஸ்.பழனிசாமி, இ.ஆ.ப. ஆகியோர் கலந்து கொண்டனர். விழாவிற்கான ஏற்பாடுகளை சேலம் மண்டல இணை ஆணையர் திரு. ப.ராஜா, சேலம் மாவட்ட உதவி ஆணையர் திரு.தா.வரதராஜன் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.





சேலம் மண்டலம் நாமக்கல் மாவட்டத்தில் ஒரு கால பூஜை நடைபெறும் திருக்கோயில்களில் பூசை செய்யும் அர்ச்சகர் மற்றும் பூசாரிகளுக்கு இலவச மிதிவண்டிகள் வழங்குதல் மற்றும் ஆதி திராவிடர்கள் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில்களுக்கு திருப்பணி நிதியுதவி வழங்குதல் ஆகியவற்றின் விழா, கடந்த 04.11.2010 அன்று நாமக்கல் கொங்கு திருமண மண்டபத்தில் மாண்புமிகு மத்திய சுகாதாரம் (ம) குடும்ப நலத் துறை இணை அமைச்சர் திரு.செ.காந்தி செல்வன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. விழாவில் நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி சோ.மதுமதி, இ.ஆ.ப. சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.கே.பி.இராமசுவாமி, திரு.கே.பொன்னுசாமி ஆகியோர் கலந்து கொண்டனர். விழாவிற்கான ஏற்பாடுகளை சேலம் மண்டல இணை ஆணையர் திரு. ப.ராஜா, நாமக்கல் மாவட்ட உதவி ஆணையர் திரு. ஜி.ரமேஷ் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.

# ஆழ்வார்களின் அரங்கம்

## ஸ்ரீபெரும்புதூர் ஸ்ரீஎம்பார் ஜீயர் ஸ்வாமிகள்




வேதத்தின் ஆழ்பொருளைச் சாறு பிழிந்து அமுதத் தமிழிலே "மறையின் குருத்தின் பொருளையும் செந்தமிழ் தன்னையும் கூட்டி இறைவனைக் காணும் இதயத்து இருள் கெட, ஞானமென்னும் நிறை விளக்கேற்றி மாமலராள் தன்னொடு மாயனைக் கண்டமை கூறினர்; சீரிய நான்மறைச் செம்பொருளை அடிமுதல் முடியளவாக அரங்கத்தின் அனுபவத்தில் காட்டினர் ஆழ்வார்கள்.


**பொய்கையார் பூதத்தார் புகழ்மழிசை**
**ஐயன் அருள்மாறன் சேரலர்கோன் - துய்யபட்ட**
**நாதன் அன்பர்தாள் தூளி நற்பாணன் நற்கலியன்**
**ஈதிவர் தோற்றத்து அடைவாம் இங்கு.**


ஆழ்வார்கள் பதின்மருடன் மதுரகவி, ஆண்டாள் இருவரையும் சேர்த்து பன்னிருவர் என்பதும் உண்டு.

### முதலாழ்வார்கள்

பொய்கை, பூதம், பேய், மூவரும் ஐப்பசியில் ஓணம், அவிட்டம், சதயம் எனும் நாட்களில் காஞ்சி, மாமல்லை, மாமயிலையில் முறையே தோன்றினர். திருக்கோவலூர் இடைகழியில் ஓர் இரவில் நெருக்குண்டு புறவிருள், அகவிருள் நீங்க ஞானத்திருவிளக்கேற்றி "திருமாலைக் கண்டவர்கள்" இம்மூவரும். மூன்று திருவந்தாதிகள் பாடினர்; நற்தமிழால் நூல் செய்து நாட்டை உய்வித்த பெற்றிமையோர் முதலாழ்வார்கள் என்று பேர் பெற்றனர்.


ஸ்ரீ பொய்கையாழ்வார்


ஸ்ரீ பூதத்தாழ்வார்


ஸ்ரீ பேயாழ்வார்

### திருமழிசைப் பிரான்

தையில் மகத்தில் தரணி போற்றப் பிறந்த திருமழிசையார், பிரம்பறுக்கும் குலத்தில் வளர்ந்து யோகியாகி, சாக்கியம் கற்றோம், சமணம் கற்றோம், சங்கரனார் ஆகமநூல் ஆய்ந்தோம் என்று இறுமாந்து முடிவில் பேயாழ்வார் அருளினால் ஆழ்வாராகத் திருந்தியவர். திருச்சந்த விருத்தமும், நான் முகன் திருவந்தாதியும் இவரது நூல்கள், பகவத் பரத்வம் கூறுவதில் வாளை உறையிலிடாதவர்.


ஸ்ரீ திருமழிசையாழ்வார்

### நம்மாழ்வார்

"அருள் மாறன்" எனப்படும் சடகோபர், வைகாசி விசாகத்தில் காரிக்கு உடைய நங்கை வயிற்றில் வந்துதித்தார். குருகூர் நம்பி, 'நம் ஆழ்வார்' என்று தலைமை பெற்று ஸ்ரீ வைஷ்ணவத்தில் பிரதம ஆசார்யராகத் திகழ்கிறார். 'வேதம் தமிழ் செய்த மாறன்' எய்தற்கு அரிய மறைகளை ஆயிரம் இன்தமிழால் பெய்தற்கு உலகில் வரும் சடகோபன், திரு விருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி ஆகிய நான்கு திவ்விய பிரபந்தங்களை நான்கு வேத சாரமாக அருளியவர்.


ஸ்ரீ நம்மாழ்வார்

## மதுரகவி

"தேவு மற்றறியேன்" என்று குருகூர் நம்பியைத் தவிர வேறு தெய்வமறியாத மதுரகவி, 'மிக்க வேதியர் வேதத்தின் உட்பொருள் நிற்கப்பாடி என்நெஞ்சுள் நிறுத்தினான்' 'அருள் கண்டீர் இவ்வுலகினில் மிக்கதே' என்று நம்மாழ்வாரின் அருள் திறத்தைப் பறை சாற்றினார், தமது நூலான "கண்ணி நுண் சிறுத்தாம்பினில்". இவர் திருக்கோளூரில் சித்திரையில் சித்திரை நாள் உதித்த அந்தணர்.



ஸ்ரீ மதுரகவியாழ்வார்

## குலசேகரன்

மாசிப் புனர்பூசத்தில் சேரர் குலத் தோன்றலாக வஞ்சிக் களத்தில் வந்தவர். குடப்பாம்பில் கையிட்டு, திருமால் அடியார் பழி அகற்றி, குலசேகரப் பெருமாளாய்த் திகழ்ந்தவர்; பெருமாள் திருமொழியில் ஸ்ரீராமாயணச் சுருக்கம், கிருஷ்ண லீலைகளோடு, திருவரங்கம், திருமலை திவ்யதேசப் பெருமை, தசரதன், தேவகி புலம்பல்களையும் இவர் நூலில் அநுபவிக்கலாம். இவர் திருவித்துவக்கோடு தந்த செல்வம்.



ஸ்ரீ குலசேகராழ்வார்

## பெரியாழ்வார்

கோதை பிறந்த ஊர், கோவிந்தன் வாழுமூர், வில்லிபுத்தூர் வேதக் கோனூர் என்றெல்லாம் கொண்டாடப் பெறும் ஸ்ரீவில்லிபுத்தூரில் ஆனி தன்னில் சோதி நாளில் வேயர் குலத்தில் குலத்தில் தோன்றியவர், பட்டர்பிரான் எனும் விஷ்ணு சித்தர், பாண்டியன் பேரவையில் வேண்டிய வேதங்கள் ஓதி, விஷ்ணுவின் மேன்மையை நிலைநாட்டி, பொங்கும் பரிவால் இறைவனுக்குப் பல்லாண்டு பாடி பெரிய ஆழ்வாரானார். வில்லி புதுவைப் பட்டன், அசோதையாக மாறி பிள்ளைத் தமிழ் பாடி, கிருஷ்ணானுபவத்தை முற்ற முடியப் பெற்றவர். பெரியாழ்வார் தம் திருமொழியில்.



ஸ்ரீ பெரியாழ்வார்

**கோதிலவாம் ஆழ்வார்கள்கூறுகலைக்<br>கெல்லாம்<br>ஆதி திருப்பல்லாண்டு ஆனதுவும் -<br>வேதத்துக்கு<br>ஓம்என்னுமது போல்உள்ளதுக்கெல்லாம்<br>சுருக்காய்<br>தான் மங்கல மாதலால்.**

என்று திருப்பல்லாண்டு நாலாயிர திவ்வியப் பிரபந்த முகப்பாய் அமையும் தன்மை பெற்றுள்ளது.

## ஆண்டாள்

பூமிப்பிராட்டியே, நமக்காக வைகுந்த வான் போகம் தன்னை இகழ்ந்து, ஆடிப் பூரத்தில் ஆழ்வார் திருமகளாராய் அவதரித்தது பட்டர்பிரானின் சிறப்பை மேலும் உயர்த்துகிறது. திருப்பாவை, நாச்சியார் திருமொழிகளை நமக்கு அருளி, பகவானுக்கு சூடிக் கொடுத்தவள்; நமக்கு அவனையே பாடிக் கொடுத்தவளும் ஆகிறாள். வேத மனைத்துக்கும் வித்தாகும் கோதை தமிழ், நாள் தவறாது ஓதி வரும் வைணவ நூல் திருப்பாவை.



ஸ்ரீ ஆண்டாள்

## அன்பர்தாள் தூளி

அர்ச்சனையில் அரங்கனைத் தவிர வேறு ஒருவரையும் பாடாத அன்பர்தாள் தூளி, மண்டங்குடியில், மார்கழிக் கேட்டையில் வந்துதித்தார். திருமாலுக்குத் திருப்பள்ளி எழுச்சியும் பாடினார். தொடையொத்த துளவமும் கூடையும் பொலித்து தோன்றிய தோளுடன் துலங்கினார் தொண்டரடிப் பொடி. 'அடியார்க்கு என்னை ஆட்படுத்தாய்' என்று வேண்டினார்.



ஸ்ரீ தொண்டரடிப்பொடியாழ்வார்

## திருப்பாணாழ்வார்

'காட்டவே கண்ட கமல பாதம்' என்று அமலனாதி பிரானின் அங்கமனைத்தையும், அரங்கத்தில் கண்டு மகிழ்ந்து விண்டுரைத்தவர் திருப்பாணன், உறையூரில் கார்த்திகை ரோகிணியில் தோன்றி பாணராய் வளர்ந்து, முனி வாகனராய் உயர்ந்து, 'என் அமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே' என்று அரங்கன் திருமேனியில் மறைந்தவர்.



ஸ்ரீ திருப்பாணாழ்வார்

## திருமங்கை மன்னன்

வேதம் தமிழ் செய்த மாறன் தமிழ் மறைக்கு ஆறங்கம் கூற அவதரித்த மங்கையர்கோன், கார்த்திகையில் கார்த்திகை நாளில் காசினியில் திருக்குறையலூரில் கள்ளர் மரபில் தோன்றி, திருவாலி நாடனாகத் திகழ்ந்தார். வாள்வலியால் திருமணங் கொல்லையில் திருமாலிடமிருந்து திருமந்திரம் கொள்ளை கொண்டார்.



ஸ்ரீ திருமங்கையாழ்வார்

**குலந்தரும் செல்வம் தந்திடும் அடியார்**
**படுதுயர் ஆயின வெல்லாம்**
**நிலந்தரும் செய்யும் நீள்விசும் பருளும்**
**அருளொடு பெருநில மளிக்கும்**
**வலம்தரும் மற்றும் தந்திடும் பெற்ற**
**தாயினும் ஆயினசெய்யும்**
**நலம்தரும் சொல்லை நான் கண்டு**
**கொண்டேன்**
**நாராயணா என்னும் நாமம்**

நற்பொருள் காண்மின் பாடிநீர் உய்ம்மின் என்றும் நம்மைப் பணித்தார். பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருஎழுகூற்றிருக்கை, சிறிய, பெரிய திருமடல்கள் ஆகிய ஆறு திவ்யப் பிரபந்தங்களை அருளினார். "நின் திருவெட்டெழுத்தும் கற்று – நான் உற்றதும் உன் அடியார்க்கு அடிமை" என்று முடிவு கட்டினார்.

பரமனின் அருளையே பற்றி நின்ற ஆழ்வார்கள் அவன் அன்றி மற்றொன்றும் வேண்டா மதத்தினர். தமிழகத்தில் ஊற்றெடுத்து, பாரதமெங்கும் பரவிய பக்திப் பெருவெள்ளம் ஆழ்வார்களின் அருளிச் செயல்களாகப் பரிணமித்தன. ஆழ்வார் பாடல் பெற்ற மண்ணெல்லாம் திவ்ய தேசமாயின. நீரெல்லாம் தீர்த்தங்களாயின.

## நூற்றெட்டுத் திருப்பதிகள்

ஆழ்வார் மங்களாஸாஸனம் (பாடல்) பெற்றவை நூற்றெட்டு திருப்பதிகள், நூற்றெட்டு என்ற எண்ணுக்கு உலக மக்கள் ஏற்றமளிப்பதும் இதனாலேயே.

**ஈரிருபதாஞ் சோழம், ஈரொன்பதாம்**
**பாண்டி**
**ஓர்பதின் மூன்றாம் மலைநாடு;**
**ஓரிரண்டாம் - சீர்நாடு**
**ஆறோடீரெட்டுத் தொண்டை; அவ்வட**
**நாடாறிரண்டு**
**கூறு திருநாடொன்றாகக் கொள்.**

சோழ நாட்டில் 40, பாண்டிய நாட்டில் 18, மலைநாடு 13, நடுநாட்டில் 2, தொண்டை மண்டலத்தில் 22, வடநாடு 12, திருநாடு 1 ஆக நூற்றெட்டு திருப்பதிகள்.

**ஆழ்வார்கள் வாழி, அருளிச்செயல்வாழி**
**தாழ்வாதுமில் குரவர் தாம் வாழி –**
**ஏழ்பாரும்**
**உய்ய அவர்களுரைத்த அவைகள்**
**தாம்வாழி**
**செய்ய மறை தன்னுடனே சேர்ந்து**

என்று ஆழ்வார்களின் சீர்மை அறிந்து நமக்கு அவர்களை உரிய முறையில் காட்டிக் கொடுத்த ஆசார்யர்களின் தனிச் சிறப்பை மணவாள மாமுனிவர் கொண்டாடுகிறார்.

சங்க காலத் தமிழர் சமயம் திருமாலையே முழு முதற் கடவுளாகப் போற்றுகிறது.

இது திராவிட நெறி. இதில் வைணவம் ஒன்றே குலம்; திருமால் ஒருவனே தேவன்!

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்!

# திருமுறைகள் காட்டும் வாழ்வியல்

# ஆய்தம்

சித்தாந்த சரபம் பேராசிரியர் முனைவர் வை. இரத்தின சபாபதி

**முன்னுரை**

மனித வாழ்க்கையில் தனியிடம் பெற்று நிற்கும் ஆற்றல் மொழிக்கு உண்டு. மொழியப் பெறுவது மொழி என்று பொது இலக்கணம் கூறும் மரபு உண்டு.

'மொழி' என்ற சொல்லுக்குத் தமிழில் ஒரு விளக்கம் உண்டு.

"மகரத்தை ஒழிப்பது மொழி"


என்பது. சற்று விரிவான விளக்கத்தை அமைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

பத்திரிகைத் தருமத்திலிருந்து மாறுபடுகிறதே இக்கட்டுரை என்று தமிழருச்சனை செய்ய வேண்டாம். மனிதர்கள் பேசும் மொழியைப் பற்றித் தெரிந்து கொள்வதும் அதனை ஊடகங்கள் வாயிலாகத் தெரிவிப்பதும் பத்திரிகைத் தருமம் தான்.

தமிழில் உயிர் எழுத்து, மெய் எழுத்து என இரண்டு வகை உண்டு.

உயிர் எழுத்தானது தானே இயங்க வல்லது. மெய்யெழுத்தானது இயக்க இயங்கும் தன்மை உள்ளது.

உயிர்எழுத்து,மெய்எழுத்து ஆகியவைகளை வரிசைப்படுத்தித் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் 'அகரமுதலி' என்ற எழுத்து வரிசை உண்டாக்கப் பெற்றது. கணக்கை அறிவதற்கு வாய்ப்பாடு அமைந்தாற்போல எழுத்து வரிசையை அறிவதற்கு 'அகரமுதலி' யானது துணை செய்யும்.



அவ்வைப் பிராட்டி, பாம்பன் சுவாமிகள் போன்றோர் அகரமுதலியைப் பயன் படுத்தித் தம்முடைய நூல்களை அமைத்தார்கள். அகரமுதலியை– எழுத்தின் வரிசை அமைப்பைத் தெரிந்து கொண்டால், அதன் அடிப்படையில் அமைந்த நூலை எளிதில் மனப்பாடம் செய்து விடலாம்.

இங்கே குறிப்பிடப் பெறுவது எழுத்துகளுக்கும் எழுத்து வரிசைகளுக்கும் அடிப்படையாக அமைந்த தத்துவக் கொள்கை (அ) மெய்ப்பொருள் விளக்கம் என்று கொள்ளுதல் வேண்டும்.

**'மொழி' என்பதன் விளக்கம்**

கூறப்பெறுவது கூற்று; பேசப்பெறுவது பேச்சு; கட்டி உரைக்கப் பெறுவது கட்டுரை என வருவது போல மொழியப் பெறுவது மொழி என்று முறைமைப்படுத்துதல் ஒருவகை. கூற்றும், பேச்சும், கட்டுரையும், மொழியும் ஒன்றே என்று கூறுதல் கூடாது.

சொல்லப் பெறும் செய்திகளைக் கூறுபடுத்தி, வகைமைப்படுத்திச் சொல்லுவதைக் கூறுதல் என்பது வழக்கு.

"பாசம் பரஞ்சோதிக்கு என்பாய்
இராப்பகல் நாம்
பேசும் போது"

என்ற திருவெம்பாவைப் பாடலையும்,

"வார்த்தையும் பேசி"

எனவரும் திருவெம் பாவைப்பாடலையும் நோக்கி உணர்க.

திருஞானசம்பந்தப் பெருமான் தாம் அருளிய 'திரு எழுகூற்று இருக்கை' (1–128) என்னும் பதிகத்தில், "கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை" என்று குறிப்பிடுகிறார். (வரி 44)



இங்கே 'கட்டுரை' என்பதை உரைநடைக் கட்டுரை என்று கொள்ள முடியாது.

மேலே குறிப்பிடப் பெற்றவைகளை யெல்லாம் எடுத்துக் காட்டியது நாம் பேசும் தாய் மொழிச் சொற்களைப் பொருள் தெரிந்து பழகிக் கொள்வதற்காகத்தான்.

இனி, கீழ்வரும் பாடல் ஒன்றைக் கருதலாம்;

**"எழுத்து அறியத் தீரும்**
**இழிதகைமை; தீர்ந்தால்**
**மொழித்திறத்தின் முட்டு**
**அறுப்பான் ஆகும் - மொழித்திறத்தின்**
**முட்டறுத்த நல்லோன்**
**முதல் நூல் பொருள் உணர்ந்து**
**கட்டறுத்து வீடு பெறும்"**

மேலே குறிப்பிடப் பெற்றது ஒரு தனிப்பாடல். 'நன்னூல்' என்ற இலக்கண நூலுக்கு உரையெழுதிய ஆறுமுகநாவலர் இப்பாடலை எடுத்தாண்டிருக்கிறார்.

இறைவனுக்கு "எழுத்தறியும் பெருமான்" என்றொரு பெயர் உண்டு. வள்ளற் பெருமானார் "எழுத்தறியும் பெருமான் மாலை" என்ற ஒரு தலைப்பில் இறைவனைப் பற்றிப் பல பாடல்கள் அருளியுள்ளார்.

எழுத்தை அறிந்தால் ஒருவனுடைய கீழ்த்தரமான குணங்கள் அற்றுப் போகும் என்பது அப்பாடலின் முதல் வரியின் பொருள். எனவே நம்முடைய கீழ்மைக் குணங்கள் அழிந்தொழிய வேண்டுமானால் நாம் நாள்தோறும் பேசும் மொழியில் உள்ள எழுத்துகள் தத்துவ அடிப்படையில் நோக்கி உணர்ந்து தெளிதல் வேண்டும்.

எனவே, மொழி என்பது ஒருவன் தன்னுடைய கருத்தை மற்றவனுக்குப் புலப்படுப்பதற்கு உரிய கருவி மட்டுமே என்று கருதி விடுதல் ஆகாது. கருத்தைப் புலப்படுத்தும் ஆற்றல் வாய்ந்த மொழிக்கு ஒரு தனித் தத்துவமும் உண்டு என உணர்தல் வேண்டும்.

மொழி என்பதன் தத்துவம் தான் என்ன? ம்+ஒழி=மொழி. மெய்யெழுத்து வரிசையில் (க்,ங் என்ற வரிசை) பத்தாவது எழுத்தே "ம்" என்பது. இது தனித்து இயங்காது.

'ம்' என்ற எழுத்தை இயக்க வேண்டுமானால் அம், இம், உம், வம், கம், காம் என முன்னே ஓரெழுத்தைச் சேர்த்து இயக்கலாம். ஆனால், அப்படிப்பட்ட சேர்க்கைகளால் 'ம்' என்ற எழுத்தை இயக்கலாமேயொழிய, பொருள் உணர்வும், அநுபவப் பேறும் கிட்டாது.

மெய்யெழுத்தில் பத்தாவது எழுத்தோடு உயிரெழுத்தில் பத்தாவது எழுத்தையும் சேர்த்து மொழியாக்கலாம்.

உயிரெழுத்து வரிசையில் பத்தாவதாக வருவது "ஓ". இப்போதுள்ள வரிசையில் 'ஐ' என்ற கூட்டு உயிர் எழுத்து ஒன்பதாவதாக வரும். அதை நீக்கி "அ, ஆ; இ,ஈ; உ,ஊ; எ,ஏ; ஒ,ஓ" என அமைத்தால் 'ஓ' என்பது பத்தாவது எழுத்தாக வரும்.

'ஓ' என்ற பத்தாவது உயிரெழுத்தை 'ம்' என்ற பத்தாவது மெய்யெழுத்தோடு சேர்த்தால்; சேர்த்து இயக்கினால் 'ஓம்' என நிற்கும். 'ஓம்' என்று ஒலித்தால் மனிதனுடைய இழிதகைமைகள் எல்லாம் ஒழிந்து போகும்.

'ஓம்' என்று சொல்லியே அனைத்து இழிவுகளையும் ஒழித்து விடுக என்று வரையறைப் படுத்தி வாழ்விப்பதே மகரத்தை ஒழிப்பது மொழி என்பதன் வாழ்வியல் தத்துவம் என உணர்தல் வேண்டும்.

### ஆய்த எழுத்தின் பொருள்

ஃ என்பதே ஆய்த எழுத்து. உயிரெழுத்துப் பன்னிரண்டையும் எழுதிவிட்டு, மெய்யெழுத்தைத் தொடங்குவதற்கு

முன்னால் தமிழ் எழுத்து வரிசையில் எழுதிக் காட்டப் பெறும் எழுத்தே ஆய்தம்.

தமிழகத்து முற்கால மனிதன் வில்லும் அம்பும் கொண்டு போரிடும் போது, எதிரிகள் விடும் அம்பைத் தடுப்பதற்கு வைத்திருக்கும் படைக்குக் "கிடுகு படை" என்பது பெயர். அதில் முற்கால அடுப்புக் கூட்டைப் போல மூன்று கொம்மைகள் இருக்கும். கிடுகு படை என்பது தாங்கும் படையே. இக்காலத்தில் காவலர்கள் கையில் மூங்கிலால் செய்யப்பெற்ற தடுப்புக் கருவி வைத்திருப்பதைக் காணலாம். இது கிடுகுபடையின் மாற்றுருவே. இதில் மூன்று கொம்மைகள் இரா.

உயிரெழுத்துக்கும் மெய்யெழுத்துக்கும் இடையில் வரும்– உயிரெழுத்துகள் பன்னிரண்டையும் கடந்தபின் பதின்மூன்றாவது எழுத்தாக வரும் அஃகேனம் என்பது உயிரெழுத்தும் அன்று; மெய்யெழுத்தும் அன்று. உயிர்மெய்யெழுத்தும் அன்று.

தமிழ் மொழியில் முதலெழுத்துகள் முப்பதே. "உயிரும் உடம்புமாம் முப்பதும் முதலே" என்பது இலக்கண நூற்பா.

**"எழுத்தெனப் படுப**
**அகர முதல் னகர இறுவாய்**
**முப்பஃதென்ப**
**சார்ந்துவரல் மரபில் மூன்றலங்கடையே"**

என்பது தொல்காப்பிய நூற்பா. பொருள் வெளிப்படை. சார்ந்து வரும் மரபுடையன மூன்று. அவை குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என்ற முப்பாற்புள்ளி எழுத்து என்பன.

முப்பாற்புள்ளி எழுத்தாகிய ஆய்தம், கூர்ந்து நோக்கினால் எழுத்தே அன்று. ஆனால் எழுத்தே இல்லை என்று அதை நீக்கி விடவும் முடியாது.

உயிரெழுத்தும் இல்லை; மெய்யெழுத்தும் இல்லை, ஆய்தம் ஓர் அடையாள எழுத்து.

**ஆய்தத்தின் வாழ்வியல் தத்துவ விளக்கம்**

'ஆய்தம்' என்ற எழுத்தானது முப்பாற் புள்ளி என்ற அடையாள எழுத்து. ஃ என்பதே ஆய்தத்தின் வரி வடிவம். இதனை இக்காலத்தார் நடுவே வளைத்து (வாங்கியிட்டு) எழுதுப என்று நச்சினார்க்கினியர் உரையெழுதுவார்.

இரண்டு புள்ளிகள் நேர்க்கோட்டில் தனித் தனியே இருக்கும். இரண்டிற்கும் மேலே; இரண்டற்கும் நடுவில் ஒரு புள்ளி இருக்கும். இதனை 'அடுப்புக் கூட்டுப் போல' என உவமைப் படுத்திக் கூறுவர்.

வாழ்வியல் தத்துவம் இருவகைப்படும். இருமைதான் வாழ்வியல் விளக்கம்

இன்பம் துன்பம்; நன்மை தீமை; இகம் பரம்; இல்லறம் துறவறம்; நோதல் தணிதல்; விருப்பு வெறுப்பு; நட்பு பகை; புண்ணியம் பாவம்; சுவர்க்கம் நரகம்; பிறத்தல் இறத்தல்; இரவு பகல் என மக்கள் வாழ்வியலில் அநுபவப் படுவன எல்லாம் இருமைகளே. மெய்மையும் பொய்மையும் கூட அப்படித்தான்.

மேலே எடுத்துக் காட்டப் பெற்ற இருமைகள் எல்லாமே முரண்பட்டவைகள் அல்ல; ஒன்றின் ஒன்று வேறுபட்டவைகளே.

முரண்பாடு வேறு; வேற்றுமை வேறு. முரண்பாடு ஒன்றை ஒன்று அழித்து விடும்.

வேற்றுமை என்பது வேறுபடும். ஆனால் இயைந்திருக்கும். சுருங்கக் கூறின் நன்மை தொண்ணுாறு பங்கும் தீமை பத்துப் பங்கும் இணைந்திருப்பதே நன்மை. இவ்வாறே அனைத்திற்கும் அமைத்துக் கொள்க.

இருமை இல்லாததாய், இருமையைக் கடந்ததாய் உள்ளது ஒன்று உண்டு. அதுவே சத்திய சுத்த வாழ்வியல் நிலை. அத்தகைய வாழ்வியலை விளக்க வந்த எழுத்தே முப்புள்ளி எழுத்து.

ஆனால், இருமைக்கு நடுவிலும் இருமையைக் கடந்தும் நின்ற வாழ்வியல் உச்சநிலையை இருமையில் வாழ்ந்துதான் கண்டு பிடிக்கமுடியும். பின்னர் இருமையைக் கடந்த ஒருமையை அடைய முடியும். இத்தகைய வாழ்வியல் நிலையை விளக்க வந்த அடையாள எழுத்தே ஃ ஆய்த எழுத்து.

இதனை திருஞானசம்பந்தப் பெருமான் தாம் அருளிய **திரு எழுகூற்று இருக்கை** *(1.128)* என்னும் பதிகத்தில்

"இருமையின் ஒருமையும்
ஒருமையின் பெருமையும்"

என்று எடுத்துக் காட்டியுள்ளார்.

"இருமையின் ஒருமை" என்ற முதல் வரிக்கு இரண்டு பொருள்.

(1) 'இரண்டும் இணைந்த ஒருமை' என்பது பொருள். எடுத்துக்காட்டு: ஆண்மையும், பெண்மையும் இணைந்த ஒருமை நிலையே அர்த்த நாரீசுர மூர்த்தம். இது வேற்றுமைப்பட்ட ஆண்மையும், பெண்மையும் இணைந்து ஒருமை என நின்று வாழும் நிலை. இவ்வாறு கூறினார் உளர். அதுவும் ஓரளவு பொருந்தும்.

(2) இருமை இல் ஒருமை. இருமை இல்லாத ஒருமை. அதாவது இருமை வாழ்வு உலகியல். உலகியலைக் கடந்த ஒருமை வாழ்வே "நீத்தார் நிலை" என்று திருக்குறள் கூறும் அந்தணர் வாழ்வர்.

**இருமை வகை தெரிந்து**
**ஈண்டு அறம் பூண்டார்**
**பெருமை பிறங்கிற்று உலகு.**

என்பது நீத்தார் பெருமை 3ஆம் திருக்குறள். மெய்மை, பொய்மை என்பன இருமை. 'உண்மை' என்பது எதிர்நிலை இல்லாதது. அதைத்தான் திருஞானசம்பந்தர் "இருமை இல் ஒருமை" என்று கூறி, அந்த ஒருமையே பெருமையுடையது என்றார்.

சேக்கிழார், பெரிய புராணத்தில் தேவாசிரிய மண்டபத்துக் கூட்டத்தினரை,

**"ஒருமையால் உலகை வெல்வார்**
**ஊனம் மேல் ஒன்றும் இல்லார்**
**இருமையும் கடந்து நின்றார்**
**இவரை நீ அடைவாய்"**

என்றார்.

**முடிவுரை:**

இருமை வாழ்க்கையே இவ்வுலக வாழ்க்கை. இருமையைக் கடந்த ஒரு வாழ்க்கையே உன்னதமாகிய வெற்றி வாழ்க்கை என உணர்ந்து தெளிந்து வாழ்வியல் நெறிபேணுதல் கடமை. இத்தகைய வாழ்வியலை உணர்த்தும் எழுத்தே அஃகு என்ற அஃகேனம்.

## பன்னிரு திருமுறைகள்

சைவத் திருமுறைகள் பன்னிரண்டு ஆகும். இவை முதலாம் திருமுறை முதல் பன்னிரண்டாம் திருமுறை வரை பெயர் சொல்லி வழங்கப்படும். சிவபெருமானின் புகழைப் போற்றித் துதித்து நாயன்மார்களும் அடியார்கள் பலரும் பாடியுள்ள பாடல்கள் திருமுறைகள் எனப்படும்.

| | | |
|---|---|---|
| 1–3. | திருமுறைகள் | – தேவாரம் – திருஞானசம்பந்தர் அருளியவை. |
| 4–6. | திருமுறைகள் | – தேவாரம் – திருநாவுக்கரசர் அருளியவை |
| 7ஆம் | திருமுறைகள் | – தேவாரம் – சுந்தரர் அருளியவை |
| 8ஆம் | திருமுறைகள் | – திருவாசகம் – திருக்கோவையார் –மாணிக்கவாசகர் அருளியவை |
| 9ஆம் | திருமுறை | – திருவிசைப்பா, திருப்பல்லாண்டு – திருமாளிகைத்தேவர், சேந்தனார், கரூர்த்தேவர், பூந்துருத்தி நம்பிகள், கண்டராதித்தர். வேணாட்டடிகள், திருவாலி அமுதனார். புருஷோத்தமர், சேதிராயர் முதலான 9பேர்கள் அருளியவை. |
| 10ஆம் | திருமுறை – | திருமந்திரம் – திருமூலர் அருளியது. |
| 11ஆம் | திருமுறை – | திரு.ஆலவாயர், காரைக்கால் அம்மையார், ஐயடிகள் காடவர்கோன், சேரமான் பெருமாள் நாயனார், நக்கீரர், கல்லாடனார், கபிலர், பரணர், இளம்பெருமானடிகள், அதிரா அடிகள், பட்டினத்தடிகள், நம்பியாண்டார் நம்பி முதலான பதினோரு பேர்கள் அருளியவை.. |

12ஆம் திருமுறை– பெரிய புராணம் – சேக்கிழார் அருளியது.

**-புலவர் பு.மா. ஜயசெந்தில்நாதன்**

# சூடிக்கொடுத்த சுரும்பார் குழலி

**ஸ்வாமி**

## மார்கழி மகள்



சூடிக்கொடுத்தவள் யார் என்று நாமறிவோம். 'சுரும்பு' எனில் வண்டு. மலர் சூடும் குழலின் மணத்தால் வண்டு கவரப்பட்டு வரும். இந்தக் காரணத்தால் ஸ்ரீ ஆண்டாளுக்கு, 'சுரும்பார் குழலி' என்றொரு பெயரும் உண்டு. 'குழலி' என சுருள் சுருளாக நீண்ட குழலழகு கொண்டவள் எனக் குறிக்கப்படுபவள் கோதை.

கண்ணன் அவளிதய மன்னன், குழலழகு கொண்டவன். எனவே 'கேசவன்' எனப்படுவான். இவள் கோதை எனப்பட்டாள். காரணம் அதே குழலழகு.

கேசவன் கீதையில் 'மாதங்களில் நான் மார்கழி' என்று மார்கழியின் சிறப்பை முழங்கினான். கோதையோ, 'தை நீராடல்' என்ற தமிழர் வழக்கத்தை,'மார்கழி நீராடலாக', மாற்றி நோன்பிருக்க தோழிகளை எழுப்பி 'திருப்பாவை'ப் பாடல்களை இயற்றினாள். குளிரில் முடங்கி படுத்துக் கிடக்காமல், விடியலில் விழித்து குளிர் நீரில் குடைந்து நீராடி 'பாவை நோன்பி'ருக்க அழைத்தாள்.

இதனால் இவளை 'மார்கழி மகள்' எனலாம்.

## திருப்பாவை

நாளொன்றுக்கு ஒரு பாடல் என்று முப்பது பாக்கள்.

மார்கழி மாதந்தோறும் நம் செவிகளுக்கு உணவாகும், செல்வமாக திருப்பாவைப் பாக்கள் ஒலிக்கின்றன. இப்படி, இவளும், ஆழ்வார்களைப் போல கோயிலில் தமிழைக் குடியேற்றிய வைணவ வைரமானாள்.

தமிழ்மறை நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில் திருப்பாவை முக்கிய இடம் பெற்றது. ஏனெனில் இது வேதமனைத்தின் வித்தாகும். ஆயர்பாடி கோபியர் காத்தியாயினி விரதமிருந்தனர். அதுவே இந்நோன்பு. பாவை நோன்பிற்குரிய பாடல்கள் என்பதால் திருப்பாவை எனும் பெயர். பெண் என்பதால் 'திரு' எனும் 'பாவை' ஆயினள். ஆகவே திருப்பாவை எனலாம்.

'மனிதர்க்கென்று பேச்சுப்படில்

வாழகில்லேன்...' என்று, 'மண்ணில் பிறந்த எந்த மங்கையும் இறைவனை அடையலாம்' என்று நடத்திக் காட்ட வந்த வனிதை, ஸ்ரீ எனும் ஆண்டாள். சீதை போல கோதையும் பூதேவியின் அவதாரம்.

## திருவவதாரம்:

பகவான் மனித கர்ப்பத்தில் பிறந்து அவதரிக்கிறான். ஆனால், பூதேவியோ அயோநிஜையாக அவதரிக்கிறாள். இராமனின் சீதையைப் போலவே கண்ணனின் கோதையும் பூமியில் திடீர் எனத் தோன்றி அவதரித்தாள்.

திருவாடிப்பூரத்தில் ஸ்ரீவில்லிப்புத்தூரில் பெரியாழ்வார் போட்ட துளசிச் செடிகளின்

கீழே, கோதை அழகான கேசமும், கைகள், கால்களில் காப்புகள், சிலம்புகள், கழுத்தில் மணிமாலைகளும் கொண்டு பொன்நிற மேனியுடன் 'நான் பொன்மகள்' என்பது போல் பூமகளாய் மண்மகள் அவதாரம் செய்தாள்.

பெரியாழ்வார், கருடனின் அம்ச பூதராய், இவளை வளர்க்கவே முன்னதாக வந்திருந்தாரல்லவா, வாரி எடுத்து கோதையென வளர்த்தார். இவளோ கண்ணனின் இராதையாக வளர்ந்தாள்.

கடினப் பயிற்சி ஏதுமின்றிக் காதலால் கன்னியரும் கடவுளை அடையலாம் எனக் காட்டினாள்.

## திருப்பாவைச் சிறப்பு:

வேதத்தை விளக்குவது. இதில் இல்லாதது இல்லை. வேத முதல்வனை உணர்த்துகிறது. சாந்தம், சக்யம், தாஸ்யம், வாத்சல்யம், சிருங்காரம் என ஐவகைப் பக்தியையும், தியாகத்தையும், பிரேமையையும் உணர்த்தி, பகவானையே வழியாகப் பற்றி (பற்றற்றான் பற்றினைப் பற்றி) அவனையே பயனாகவும் பெறச் சொல்கிறது. காட்டுக்கு ஓடாமல் கமண்டலம் ஏந்தாமல் கண்ணை மூடித் தவமியற்றாமல், காவி கட்டித் திரியாமல் இறைவனை நம்மாழ்வார் அருளிச் செய்தது போல் 'அவனருளால் அவனை உற'ச் சொல்கிறது. இறைவனைப் பெற எளிய வழி இறைப் பிரேமையே என்கிறது. மதுரபக்தி எனும் நாயகீ பாவனையில் கோதை வாழ்ந்தாள்.

பகவானின் திருநாமம் பாடல், 'எல்லாம் அவனுக்கே' என அர்ப்பணித்தல் அவனைப் பெற்றுத் தரும் என்று இறைவனையே மணந்து அவனுள் மறைந்து கலந்து காட்டினாள்.

'இறைவனிடம் மிகவும் பிரியம் கொள்வது பக்தி. இது அவனுடைய எண்ணத்தை மட்டுமே தருவதால் இதுவே தியானம். செய்ய வேண்டியதை இதைச் செய்வதே ஞானம். 'இறைவனின் சரீரமே நான் என அறிந்து, இறைவனை விட்டு என்றுமே விலக – விலக்க முடியாதவர்கள் நாம்' என்று அறிவதே ஞானம். இதன், விளைவாக இறைவனை அடைந்து அவனுக்குக் 'குற்றேவல்' புரிவதே பயன். அதனால் அவனுறும் ஆனந்தம் கண்டு மகிழுவதே பேரின்பம்' என்றெல்லாம் அரிய பெரிய தேவையான வேதக் கருத்துக்களை விளக்குவது அவள் பெருமை.

திருப்பாவை நூலறிவால் உண்டாகுபவை.

1) 'இறைவனைக் காதலிக்கும் நிலை உண்டாகும்.
2) உலகப் பயன்களை அவனிடம் கேட்கும் நிலை நீங்கும்.
3) இறைவனிடம் சொர்க்கப் பயன் கேட்கவும் தோன்றாது.
4) மோட்சம் நாடுவதும் போய்விடும்.
5) 'எப்போதும் இறைவனுடனிருந்து அவனுக்குத் தொண்டாற்ற விருப்பம் வரும். இறைவனின் மகிழ்ச்சியில் மகிழும் நிலை ஏற்படும். தன்னை அர்ப்பணிக்கும் இறுதி நிலை உண்டாகும்.

இதையடைய வயதோ, சமூக அந்தஸ்தோ, செல்வமோ, பதவியோ, கல்வியோ, அழகோ எதுவும் தேவையில்லை.

## சித்தோபாயம்

கர்ம, ஞான, பக்தி, தியான யோகங்களும் தேவையில்லை; பகவானை – பரமாத்மாவை நேசித்தால் மட்டும் போதும் என்பதே திருப்பாவை யோகம்.

இந்த ஒரு திருப்பாவையே 'உயர்வற உயர் நலம்' அளிக்கும் இறைவனைச் சேரச் செய்துவிடும்.

உலகில் சாத்யோபாயம், சித்தோபாயம் என இரண்டு உண்டு. கர்ம, ஞான, தியான, பக்தி யோகங்கள் எல்லாம் சாத்யோபாயம். அதாவது சாத்யத்தை அடையச் சாதனம் ஆகும். இவற்றை வழியாகப் பற்றுவதை விட எளிய வழி சித்தோபாயமே. அதாவது சித்தமாக (தயாராக) இருக்கும் இறைவனே அவனைப் பெற சிறந்த வழி. எப்படியெனில், சாதனைகளை வழியாகப் பற்றி சொந்த முயற்சி செய்தாலும் அதற்குப் பலனை அளிப்பவன் இறைவனே. அதனால் அவனையே நேராகக் காதலித்து அருளை வேண்டுவது எளிதுதானே. தருமமே கடவுள் என்பதால் அவனையே சரணடைந்து அவன் பேரைப் பாடுவதால், சிந்திப்பதால், கருமங்கள் கரைந்து அவனைச் சேர முடியும். – இப்படி திருப்பாவையில் ஸ்ரீ ஆண்டாள்

நமக்குத் தெரிவிக்கிறாள்.

ஸ்ரீ ஆண்டாள்:

'இறைவனுடைய காதல், ஆசார்யர் பக்தி, அடியார் குழாமுடன் சேர்ந்திருத்தல்' போதும் என வழிகாட்டுவது திருப்பாவை. திருப்பாவையால், இறைவனை அவனுக்கு நெருங்கியவரை முன்னிட்டு அடையலாம் என அறிகிறோம்.

இதனால் எல்லாம் ஆழ்வார்களையும் மிஞ்சியவள் 'பிஞ்சில் பழுத்தவள்' என்று பன்னிரண்டு வயதில் பரமனை அடைந்த ஆண்டாள் பாராட்டப்படுகிறாள்.

ஆழ்வார்கள் 'மயர்வற மதிநலம்' இறைவனால் அருளப் பெற்றவர்கள். ஸ்ரீ ஆண்டாளோ அந்த் மதிநலத்துடனேயே வந்தவள்.

ஆண்களான அத்தனை ஆழ்வார்களும் (மதுரகவியைத் தவிர), நாயகியாகத் தம்மைக் கருதி நாயகனாக பகவானை நேசித்தவர்கள். இது செயற்கை. பெண் ஒருவளே தன்னைப் பகவானின் நாயகியாகக் கருதிக் காதலித்தது பள்ளம் நோக்கி நீர் பாய்வது போல இயற்கை. இதுவே சிறப்பெனப்படும்.

பூதேவியம்சமாகப் பூமியில் திடீரெனக் கிடந்து வந்தவன் 'வடபத்ரசாயி' (ஆலிலைப் பெருமாள்)யைக் காதலித்தாள். ஸ்ரீ வில்லிபுத்தூரையே ஆயர்பாடியாக எண்ணி, தன்னையும் தோழிகளையும் கோபிகைகளாகப் பாவித்தாள். கார்த்தியாயினி நோன்பை கோபியர் கொண்டாடியதை மாதிரியாக வைத்து, திருப்பாவை நோன்பிருந்தாள்.

'மார்கழி நீராடல்' எனப் பகவானைக் கலக்க நினைத்தாள். ஊருக்கு நன்கு மழை பொழிய நோன்பிருப்பதாகச் சொல்லி, உள்ளத்தில் கண்ணனையே கணவனாக அடைய பாவை நோன்பிருந்தனர், பாவையர்.

இறைவனே கனவில் வந்து கைத்தலம் பற்றுவதாகக் கண்டாள். 'எப்படியும் பகவானை அடைந்துவிட வேண்டும் என்று ஆதூரம் மிஞ்சவே அடங்கியிருக்கப் பொறாமல் பாவை நோன்பிருந்தாள். வழியில்லா வழியிலும் பகவானை அடைய மன்மதனை உதவி செய்யக் கேட்டாள்.

இதிரண்டும் வைணவக் கொள்கைப்படி ஆறியிருத்தலையும், மறந்தும் புறந்தொழாமையையும் மீறியதாகும். ஆனாலும் காதல் மீறிய நிலையில் அனுமதிக்கப்பட்டவை.

பூமாலை தொடுத்து வடபத்ரசாயிக்குச் சூட்டும் கைங்கர்யம் பெரியாழ்வார் எனும் விஷ்ணு சித்தர் செய்து வந்தார்.

அவர் மகளாக எல்லார் உள்ளத்தையும், பெருமாள் நெஞ்சத்தையும் கட்டி கவர்ந்து ஆண்டு வந்ததால் ஆண்டாளான கோதை, விஷ்ணு சித்தர் தொடுத்து வைத்திருந்த மாலைகளைக் கூந்தலிலும், உடலிலும் சூடி அழகு பார்த்து, 'காறை உடுத்தி, கண்ணாடி பார்த்து' களைந்து வைத்தாள்.

அதைப் பெருமாளுக்கு ஆழ்வார் கொடுத்தார்.

அதில் கூந்தலிழை இருக்க பட்டர் திருப்பிக் கொடுத்து விட்டார். வருத்தத்துடன் புது மாலை கட்டி ஆழ்வார் தர அதைப் பெருமாளுக்குப் பட்டர் சாற்றினார். வடபத்ரசாயிப் பெருமாள் புதுமாலையை ஏற்கவில்லை.

அபசாரமாகி விட்டதே என அனைவரும் கவலையாயிருக்க, பட்டர், ஆழ்வார் கனவில் பகவான் தோன்றி, "ஸ்ரீ ஆண்டாள் சூடிக் களைந்த மாலைகளே தமக்குப் பிரியம்" என்று கூறிவிட்டார்.

அதைப் பட்டர் தெரிவிக்க, ஆழ்வாரும் மகிழ்ந்து மாலைகளைத் தொடுத்து ஆண்டாளுக்கு அணிவித்துக் கழற்றி ஆண்டவனுக்குச் சாற்றிக் கொடுத்தார். மாலையிலிருந்து புதுமணம் வீச பகவானும் தம் மகிழ்வைக் காட்டினார்.

பிறகு ஸ்ரீரங்கம் அரங்கநாதர் பட்டர் மூலம், "ஆண்டாளைத் திருமணம் செய்து கொள்ள ஆசை" என்று தெரிவித்தார். பரிவாரங்கள் மரியாதைகளுடன் ஸ்ரீவில்லிபுத்தூருக்கு வந்து ஸ்ரீ ஆண்டாளை அழைத்துப் போயினர்.

பெரிய பெருமாளுடன் ஆண்டாளுக்குத் திருமணம் நடந்தது. அப்படியே கருவறைக்குள் நுழைந்து பெருமாளின் திருமேனியில் கலந்து ஸ்ரீ ஆண்டாள் உடலுடன் மறைந்தாள்.

சுரும்பார் குழலியின் சுருக்கமான வரலாறு இது. திருப்பாவை, நாச்சியார் திருமொழியின் பெருமைமிக்க சாராம்சமும் சேர்ந்ததிது.

❋

# அணியுடைய ஆதிரைநாளும் அழகிய விடங்கரும்

சிவமஞ்சரி செம்மல். பூசை. ச.அருணவசந்தன்


''**வி**டங்கம்'' என்ற சொல்லுக்குப் பெரும் சத்தத்துடன் வெடித்துத் தோன்றும் அனல் மிகுந்த ஜோதி என்பது பொருள்.

அண்ட வெளியில் பெரும் சத்தத்துடன் ஒரு வெடிப்பு உண்டாகிச் சிதறல் ஏற்பட்டு, உலகங்கள், நட்சத்திர மண்டலங்கள் தோன்றியது என்கின்றனர். அப்படி வெடித்துச் சிதறி உண்டானதில் முதன் முதலாக நட்சத்திரமாக உருப்பெற்றது திருவாதிரை ஆகும்.

ஆருத்ரா என்றால் ஈரமாகக் குளிர்ச்சியுடன் இருப்பது என்பது பொருள். வெடித்துச் சிதறியதில் குளிர்ச்சியடைந்து ஜொலிக்கத் தொடங்கியதால் அந்த நட்சத்திரம் ஆர்த்ரா என்றழைக்கப்படுகிறது. அது தோன்றிய நாளையே உலகம் பிறந்த நாளாகக் கொண்டாடுகின்றனர். அதையே சிவபெருமானின் முதல் வெளிப்பாடாகக் கருதுவதால் அந்நாளைச் சிவபெருமானுக் குரியதென்று போற்றுகின்றனர்.

ஈரத்தோடு தொடர்புடைய அந்த நட்சத்திரம் பனியும் குளிரும் கூடிய மார்கழி மாதத்தில் பௌர்ணமியோடு கூடிவரும் நாளையே திருவாதிரை என்று போற்றுகின்றோம்.

உலகம் தோன்றிய அன்று சிவபெருமான் ஐந்தொழிலை ஆற்றும் திருநடனத்தை





ஆடிப் படைத்தல், காத்தல், அருளல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழிலைத் தொடங்கினார். அதையொட்டியே திருவாதிரை நாளில் பெருவிழா கொண்டாடப்பட்டு வருகிறது. இந்நாளில் நடராசருக்குச் செய்யப்படும் அபிஷேகம் படைப்புத் தொழிலையும், வெள்ளை சாத்துதல் அருளலையும், கிருஷ்ணகந்தம் எனும் கருஞ்சாந்து அணிவித்தல் அழித்தல் தொழிலையும் குறிக்குமென்கின்றனர்.

இனி அந்த வெடிப்பில் தோன்றிய ஒளி வடிவமான இறைவன் திருமேனியைப் பற்றிச் சிந்திக்கலாம். ஆதியில் தோன்றிய இறைவனின் திருமேனி ஜோதி வடிவ லிங்கமாக வெளிப்பட்டது. அதனால் அதுவே விடங்கம் எனப்பட்டது. உலகத் தோற்றத்திற்கு மூலப்பொருளாக இருப்பதால், அது உலகவிடங்கம் எனப்பட்டது.

முதலில் சிவலிங்கத்திற்கு வழங்கிய அப்பெயர் பின்னாளில் சோமாஸ்கந்த மூர்த்திக்கு அப்பெயர் சிறப்புப் பெயராயிற்று. சோமாஸ் கந்தரே வீதிகளில் எழுந்தருளும் மூர்த்தியாக இருந்ததால், வீதி விடங்கர் என அழைக்கப்பட்டார். விடங்கராய் வீதி போந்தார் என வரும் தேவாரத் தொடர் இங்கே சிந்திக்கத் தக்கதாகும். திருவாரூர் சோமாஸ்கந்த மூர்த்தியான தியாகேசருக்கு வீதிவிடங்கர் என்னும் சிறப்புப் பெயர் வழங்குகின்றது. சோழ மன்னர்கள் காலத்தில் எழுந்தருளி வைக்கப்பட்ட சோமாஸ்கந்தர்கள் விடங்கர் என்ற பெயரால் அழைக்கப்பட்டனர்.

கண்டராதித்தன் பெயரால் எழுந்தருளிவிக்கப் பெற்ற சோமாஸ்கந்தரைத் தட்சிணமேரு விடங்கர், இராஜராஜ விடங்கர் எனும் பல பெயர்களில் சோமாஸ்கந்தர் திருவுருவங்கள் எழுந்தருளுவிக்கப்பட்டதைச் சோழர் காலக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. கொங்கு நாட்டில் எழுந்தருளுவிக்கப்பட்ட சோமாஸ் கந்தர் கொங்குவிடங்கர் எனப்பட்டார்.

விடங்கம் என்ற பெயரை மக்கள் சூடியிருந்தனர். திருவாரூரைத் தலைநகராகக் கொண்டு சோழ நாட்டை ஆண்டு வந்த மன்னனின் பெயர் வீதிவிடங்கன் என்பதாகும். இராஜராஜனின் தேவியார் பெயர் தந்தி சக்தி விடங்கியார் என்பதாம்.

மக்கள் பெயராக மட்டுமின்றி, ஊர்களுக்கும் விடங்கம் எனும் பெயர் சூட்டப்பட்டன. உலோக விடங்கம் என்ற பெயரில் ஊர்கள் அமைக்கப்பட்டன. அவை பேச்சு வழக்கில் உரகடம், உலகடம் என மருவி வழங்குகின்றன.

கார்த்திகை மாதத்துக் கிருத்திகையை வெடிப்பு நிகழ்ந்த நாளாகவும், மார்கழி மாதத்து பௌர்ணமி அலை தணிந்து உலகம் தோன்றிய நாளாகவும் கொள்ளுகின்றனர்.

பொதுவாக சிவபெருமானுக்கே உரியதாக விடங்கர் என்ற பெயர் வழங்கினாலும், முருகன், விநாயகர், நரசிம்மர் ஆகியோருக்கும் இப்பெயர் வழங்குகிறது.

திருச்செந்தூரில் இருக்கும் செந்தில் நாதனின் முதன்மை உலாத் திருமேனிக்குக் குமார விடங்கர் என்பது பெயராகும்.

சிவபெருமானின் கண்ணிலிருந்து புறப்பட்டு செந்தீதழலாகத் தோன்றி சரவணப் பொய்கையில் குளிர்ந்து முருகனாக உருப்பெற்றதால் விடங்கன் எனப்படுகின்றான்.

நரசிம்மருக்கும் "விடங்கர்" என்பது பெயர். இரணியனின் சபையில் இருந்த தூணின் நடுவேயிருந்து இடிஇடித்தது போல் பெருத்த ஓசையுடன் அனல் பிழம்பு வெளிப்படத் தோன்றியதால் அவரும் விடங்கர் எனப்படுகின்றார். காசி நகரில் உள்ள புகழ் பெற்ற நரசிம்ம வடிவங்களில் விடங்க நரசிம்மரும் ஒன்றாகும்.

மார்கழித் திருவாதிரையில் வீதி விடங்கரான தியாகேசப் பெருமான் வலது திருவடி தரிசனத்தை வழங்குகின்றார்.

திருவாரூரில் திருவாதிரை நாள் சிறப்புடன் நடைபெற்று வருகிறது. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அவ்விழா சிறப்புடன் நடந்ததைத் தேவாரம் கூறுகிறது. அவ்விழாவின் சிறப்புக்களை விவரிப்பதாகவே ஒரு பதிகம் உள்ளது. அதில் அணியுடை ஆதிரைநாள் என்று இவ்விழா குறிக்கப்பட்டுள்ளது.

உலகப் படைப்பிற்கு மூலத்தனமாக விளங்கும் திருவாரூரையும் அதில் விடங்கராக வீற்றிருக்கும் தியாகேசரையும் திருவாதிரை நாளில் போற்றி வழிபடுவோம்.

❋

# அன்பில் வடிவழகிய நம்பி திருக்கோயில்

ம.ராஜகோபாலன்



**தி**ருச்சிராப்பள்ளி நகரிலிருந்து லால்குடி வழியாக சுமார் 31 கி.மீ., பயணம் செய்தால் அன்பில் எனும் சிற்றூரை அடையலாம். இவ்வூரில் திருமழிசை ஆழ்வாரின் பாசுரத்தைப் பெற்றுள்ள வடிவழகிய நம்பி திருக்கோயிலும், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோரின் பதிகங்களைப் பெற்றுள்ள பிரேமபுரீஸ்வரர் திருக்கோயிலும் அமைந்துள்ளன. மேல் அன்பில் எனும் பகுதியில் உள்ள வடிவழகிய நம்பி திருக்கோயில், சோழநாட்டு திவ்விய தேசங்களுள் ஐந்தாவதாகும்.

**தலவரலாறு:**

ஸ்ரீமன் நாராயணனின் கட்டளையின் பேரில் சகல உலகங்களையும் படைத்த பின் பிரம்மதேவன் தனது நாவிலிருந்து உருவான வாக்தேவி எனும் கலைமகளைப் பிடிவாதத்துடன் திருமணம் செய்து கொண்டார்.

பிற்காலத்தில் சிவபெருமானால் உரிய தண்டனை அளிக்கப்படும் என்ற சாபம் பிரம்மனைப் பற்றியது. சத்திய லோகத்திற்குச் சிவபெருமான் வந்தபோது பிரம்மன் ஈசனை வணங்கி வரவேற்றார். ஆனால் பிரம்மனின் ஐந்தாவது தலை ஈசனை வணங்காமல் நிந்தனை செய்தது. ஆணவத்தால் எக்காளமிட்ட ஐந்தாவது தலையை ஈசன் கிள்ளி எறிந்தார். கிள்ளி எறியப்பட்ட அத்தலை பிரம்ம கபாலமாக ஈசனின் கையில் ஒட்டிக் கொண்டது. பிரம்ம கபாலத்தையே பிட்சைப் பாத்திரமாக ஏந்தியவாறு ஈசன் திரிந்தார். உத்தமர் கோயில் என்ற தலத்தில் திருமகள் ஈசனின் பிரம்ம கபாலம் நிறையுமளவு பொருள் அளித்தவுடன் அக்கபாலம் ஈசனின் கையை விட்டு அகன்றது. பிரம்ம கபாலம் தன்னை விட்டு அகன்றவுடன் சிவபெருமான் அன்பில் சென்று திருமாலைப் போற்றினார். பிரம்ம கபாலம் நீங்கிய பின் ஈசன் துதித்த முதல் தலம் என்ற பெருமை அன்பிலுக்கு உரியது.

மண்டூக முனிவர் எனும் தவசி பற்பல இன்னல்களையும் பொருட்படுத்தாமல் இத்தலத்தில் நீண்ட காலம் நீரினுள் மூழ்கிய நிலையில் திருமாலைத் துதித்து வந்தார். முனிவரின் வைராக்கியத்திற்குப் பரிசாகத் திருமால் நேரில் காட்சி அளித்து அருளினார். முனிவர் பெயரால் இத்தலம் மண்டூகபுரி என வழங்கப்பட்டது.

பிரம்மதேவரின் மகன் வழித்தோன்றலான ஒருவர் தீய வழிகளில் சென்று வேடுவர்களின் பாதையை நாடினார். கொலை, கொள்ளை ஆகியவற்றில் ஈடுபட்டு வந்த வேடர் ஒரு முனிவரால் ஆட்கொள்ளப்பட்டார். கொலை, களவு போன்ற ஈனச் செயல்களால் பெற்ற பொருளை ஏற்றுக் கொள்ளும் தனது குடும்பத்தினர், தனது பாவச் செயல்களின் விளைவு ஏற்கமாட்டார்கள் என வேடர் உணர்ந்து ஞானம் பெற்றார். முனிவரின் அறிவுரையின் பேரில் மராமரத்தைப் பார்த்து 'மரா மரா' என இடைவிடாமல் உச்சரித்தவாறு நிஷ்டையில் அமர்ந்தார். அச்சொற்கள் 'ராம ராம' எனவே ஒலித்தன. அவரைச் சுற்றிப் புற்றுக்கள் வளர்ந்தன. ஞானம் பெற்று வெளியே வந்த முனிவருக்கு வான்மீகி என்ற பெயர் ஏற்பட்டது. (வான்மீகம் = புற்று.) இவரே இராமகாதையை வடமொழியில் இயற்றினார். வால்மீகி என வழங்கப்படும் இம்முனிவர் அன்பில் திருத்தலத்தில் அவதரித்து ஞானம் பெற்றதாக இத்தல வரலாறு கூறுகிறது. திருமாலின் மூலத் திருவுருவங்களுள் எவ்வடிவம் அதிக அழகானது என பிரம்மாவும் வான்மீகியும் விவாதித்து வந்தபோது இத்தலத்து பெருமாள் நேரில் தோன்றி இங்குள்ள வடிவழகிய நம்பியின் வடிவமே எழிலானது எனச் சுட்டிக் காட்டினாராம்.

தமிழ் வரலாறு:

பிற்கால சோழர் வரலாற்றில் சுந்தர சோழன் எனும் இரண்டாம் பராந்தகனுக்கு முக்கிய பங்கு உண்டு. தக்கோலப் போரில் சோழர்கள் இழந்த பகுதிகளைச் சிறிது சிறிதாகக் கைப்பற்றிய பின் சேவூர் போரில் பாண்டியனையும் சிங்களப் படைகளையும் இம்மன்னன் வெற்றி கொண்டு மதுரை கொண்ட கோராச கேசரி வர்மன் என்ற விருதை பெற்றான். போர்க்களம் செல்லும் முன்னர் அன்பிலில் உறையும் பெருமாளின் திருவடிகளில் தனது வாளை வைத்து வணங்குவது இம்மன்னனின்

வழக்கம் என நம்பப்படுகிறது. போரில் வெற்றி பெற அருளிய பரமனுக்கு இம்மன்னன் ஏராளமான கொடைகளை அளித்தானாம்.

இத்தலத்தில் வாழ்ந்து வந்த சிலம்பி என்ற நடன மாது ஒரு முறை கம்பரிடம் தன்னைப் பற்றி ஒரு பாடல் பாடுமாறு கேட்டாளாம். ஆயிரம் பொன் அளித்தால் ஒரு பாடல் பாடுவதாகக் கம்பர் கூறினாராம். தன்னிடம் ஐநூறு பொன் மட்டுமே உள்ளதால் பாதி பாடலைப் பாடுமாறு சிலம்பி வேண்டினாளாம். உடனே,

**"தண்ணீரும் காவேரி**
**வேந்தனுஞ் சோழன்**
**மண்ணாவதுஞ் சோழ மண்டலமே -**
**பெண்ணாவான்"**

எனப் பாதி பாடலைக் கம்பர் பாடினாராம். சிலம்பி வறுமையில் வாடியபோது அவளது குடிலுக்கு ஔவையார் வந்தாராம். மூதாட்டிக்குச் சிலம்பி கூழ் அளித்தார். ஔவையார் அப்போது கம்பர் பாடிய முற்றுப் பெறாத பாடலைக் கண்டார்.

**"அன்பிற் சிலம்பி**
**யரவிழ்த்த தாளடியாள்**
**செம்பொற் சிலம்பே சிலம்பு"** என அப்பாடலை ஔவையார் முடித்துக் கொடுத்தார். இச்சம்பவம் செவிவழிச் செய்தியாகவே வழங்கப்படுகிறது.

கல்வெட்டுச் சிறப்புகள்:

சோழ மன்னர் முதலாம் குலோத்துங்கன், போசள மன்னன் வீரராமநாத தேவன் பாண்டிய மன்னன் ஜடாவர்மன் விஜயநகர அரசர் சாளுவ சங்கம தேவராயர் ஆகியோர் காலத்தில் இக்கோயிலுக்கு மானியங்கள் வழங்கப்பட்டன. 'சுங்க வரிகளிலிருந்து ஆலயத்திற்கு விலக்கு அளிக்கப்பட்டது. பூசம், திருக்கார்த்திகை ஆகிய நாட்களில் சிறப்பு வழிபாடு நடத்த நில தானம் அளிக்கப்பட்டது.

ராமானுஜதாஸர் என்பவர் இக்கோயிலில் திருப்பணிகளுக்காகக் கற்பலகைகளும் பொன்னும் அளித்தார். வேதியர் ஒருவர் இவ்வாலயத்தில் திருமகள், இலக்குவன், அனுமன் ஆகிய திருமேனிகளை நிறுவச் செய்தார்.

"காவேரியின் வடகரையில் உள்ள ராஜராஜ வள நாட்டிலுள்ள கீழ்மூரி எனும் நாட்டின் பிரம்மதேயமான அன்பில்" என இவ்வூரும் வடிவழகிய பெருமாள் என இறைவரும் விஜயநகர அரசுக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளன.

கோயில் அமைப்பு:

அழகிய மூன்று நிலை கோபுரத்துடனும் ஒரே பிரகாரத்துடனும் இக்கோயில் காட்சி தருகிறது. கருடாழ்வாரைத் துதித்தவாறு உள்ளே சென்று



மூல கருவறையை அடையலாம். மூலவரான வடிவழகிய நம்பி புஜங்க சயனராகக் கிழக்கு நோக்கியவாறு தோன்றுகிறார். ஆதிசேஷன் தலைக்கு மேல் குடை பிடிக்கிறார். திருவடியருகே திருமகளும் நிலமகளும் உள்ளனர். நாபிக் கமலத்தில் இருந்து பிரம்ம தேவன் வெளிப்படுகிறார். உற்சவரான சுந்தரராஜன் தேவியருடன் காட்சி தருகிறார். முன் மண்டபத்தில் நரசிம்மன், வேணுகோபாலன், லட்சுமி நாராயணன், வீர ஆஞ் சநேயர், ஆழ்வார்கள், உடையவர் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

வெளிச்சுற்றில் அழகியவல்லி நாச்சியார் எனப்படும் தாயார், ஆண்டாள், சேனை முதலியார் ஆகியோர் உரிய இடங்களில் அருள் புரிகின்றனர். மண்டூக புஷ்கர்ணியும் கொள்ளிடமும் இத்தலத்திற்குரிய புனித நீர்நிலைகளாகும். கருவறையை அலங்கரிக்கும் விமானம் தாரக விமானம் எனப்படும்.

இலக்கியம்:

திருமழிசையாழ்வார் அருளிய நான்முகன் திருவந்தாதியிலுள்ள ஒரு பாடலில் மட்டும் அன்பில் பற்றிய குறிப்பு உள்ளது. திருப்பாற்கடலில் பள்ளி கொண்டுள்ள பரமன் தனது அன்பர்களின் இதயத்தில் மட்டுமின்றி திருக்குடந்தை, திருவெஃகா, திருவள்ளூர், திருவரங்கம், திருப்பேர்நகர், அன்பில் ஆகிய திருத்தலங்களிலும் குடி கொண்டுள்ளதாக இப்பாடல் கருத்து தெரிவிக்கிறது.

"இப்பூவுலகு முழுவதும் அரசாண்டும் பலனில்லை. அன்பில் தலத்தில் உறையும் பரமனின் திருவடிகளை நாடினால் வீடு பேறு பெறலாம்," என்ற கருத்தை திவ்விய கவி பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் *108* திருப்பதி அந்தாதியில் வெளியிட்டுள்ளர்.

வழிபாடுகள்:

இவ்வாலயத்தில் நாள்தோறும் இரண்டு கால வழிபாடுகள் எளிமையாக நடைபெறுகின்றன. காலை ஏழு மணி முதல் பன்னிரண்டு மணி வரையிலும் மாலை ஐந்து மணி முதல் எட்டு மணி வரையிலும் ஆலயத்தில் இறைவனைத் தரிசிக்கலாம். வைகாசி விசாகம், ஜேஷ்டாபிஷேகம், கிருஷ்ண ஜெயந்தி, நவராத்திரி, கௌசிக ஏகாதசி, கார்த்திகை தீபம், வைகுண்ட ஏகாதசி இராப்பத்து உற்சவம், மாசி தீர்த்தவாரி, கருடசேவை, பங்குனி தாயார் திருமஞ்சனம் போன்ற விழாக்கள் உபயதாரர்கள் உதவியுடன் நடைபெறுகின்றன.

இவ்வாலயத்தின் பகுதிகள் புதுப்பிக்கப்பட்டு *1913, 1999* (ஐப்பசி *2*) ஆகிய ஆண்டுகளில் குடமுழுக்குகள் நடைபெற்றுள்ளன.

# ஆடவல்லானும் ஆதிரைச் சிறப்பும்

பருத்தியூர் டாக்டர் கே.சந்தானராமன்

**வ**லக்கரத்தில், 'துடி' அல்லது உடுக்கையும், இடக்கரத்தில் அக்கினியையும் ஏந்தி, மற்றொரு வலக்கரத்தால் அபய முத்திரை காட்டி, அவ்வாறே மற்றொரு இடக்கரத்தால் தமது தூக்கிய திருவடியைக் காட்டி, தாண்டவக் கோலத்தில் காட்சி தருபவர் நடராஜப் பெருமான்.

அரங்கத்தில் ஆடுவதால் இவரை, 'சபாபதி' என்றும் கூறுவர். தமிழில் கூத்தப்பிரான் என்றும், திருச்சிற்றம்பலக்கூத்தர் என்றும் குறிப்பிடுவர். நடராஜப் பெருமானின் உடுக்கை, சிருஷ்டி அல்லது படைத்தலையும், அபயக்கரம், ஸ்திதி அல்லது காத்தலையும், மழு (அக்கினி), சம்ஹாரம் அல்லது அழித்தலையும், ஊன்றிய திருவடி, திரோதானம் அல்லது மறைத்தலையும், தூக்கிய திருவடி, அனுக்கிரஹம் அல்லது அருளுதலையும் குறிப்பால் உணர்த்துகின்றன. இந்த ஐந்தையும் பஞ்ச கிருத்தியம் அல்லது ஐந்தொழில் என்று கூறுவர்.

நடராஜரின் திருவுருவத்தைச் சுற்றி அமைந்திருக்கும் திருவாசி பிரணவத்தின் வடிவாகும். திருவாசியில் தீச்சுடர் போல் தென்படும் அமைப்புகள் மந்த்ர மாத்ருகா அட்சரங்கள் என்னும் மூலமந்திர எழுத்துக்களைக் குறிக்கும்.

உலகத்தின் தோற்றம், இயக்கம் முதலான அனைத்தும் நடராஜ மூர்த்தத்தில் அடங்கியுள்ளன. எனவே, நடராஜரின் தாண்டவத்தை மேல்நாட்டு அறிஞர்கள் Cosmic Dance என்று கூறிப் புகழ்ந்து, வியந்து, பாராட்டுகின்றனர்.

நடராஜரின் இடப்பக்கத்தில் நிற்பவளே, 'சிவகாம சுந்தரி' என்று போற்றப்படும் அம்பிகையாவாள். எல்லாத் திருக்கோயில்களிலும் நடராஜர் சன்னதி தெற்கு நோக்கியே அமைந்திருக்கும். பூஜைக் குரிய நடராஜர் திருமேனி பெரும்பாலும்



பஞ்சலோகப் படிமமாகத்தான் இருக்கும். உத்தரகோசமங்கை, பரமக்குடி மற்றும் தஞ்சை மாவட்டம் நாச்சியார்கோயிலை அடுத்த கூகூர் போன்ற சில இடங்களில் வழிபடப்படும் நடராஜர், கற்சிலை உருவங்களாக அமைந்துள்ளன. இவற்றில் உத்தரகோசமங்கை நடராஜர் மரகதத் திருமேனி உடையவர்.

இலங்கை யாழ்ப்பாணம் பகுதியில் உள்ள கீரிமலை கோயிலிலுள்ள நடராஜர் படிமம் சடையில்லாமல் காணப்படுகிறது. திருஞான சம்பந்தர், கொல்லி மழவன் மகளின் வலிப்பு நோய் தீர்த்த பாச்சிலாச்சிரமத்து நடராஜரின் பாதத்தின் கீழே முயலகன் இல்லை.

தில்லை நடராஜர் சன்னதியை அடைய ஐந்து படிகள் ஏற வேண்டும். அவை சிவபெருமானின் ஐந்தெழுத்தை உணர்த்தும், 'பஞ்சாட்சரப் படிகள்' எனப்படும். தமது திருவாசகத்தின் பொருள் 'இவனே' எனத் தில்லையம்பலவாணனைச் சுட்டிக் காட்டினார் மாணிக்கவாசகர். தேவாரப் பதிகங்களும் தில்லையிலிருந்து எடுக்கப்பட்டே உலகிற்கு அளிக்கப்பட்டன. ஆகவே, மணிவாசகர் படிமமும், பன்னிரு திருமுறைகளும் நடராஜர் சன்னிதியில் இடம் பெறுதல் சிறப்புடையதாகும். அவை இல்லாத இடங்களில் அவற்றைப் பிரதிஷ்டை செய்ய, சைவப் பெரியோர்கள் முயன்று வருகின்றனர்.

அந்த முயற்சி ஒரு சமயச் சடங்கு மட்டும் அன்று. பண்பாட்டையும் இலக்கியங்களையும் பாதுகாத்து, எதிர்கால சமுதாயத்துக்கு வழங்கிடும் மகத்தான் பணியும் ஆகும்.

இருபத்தேழு நட்சத்திரங்களில் இரண்டு மட்டுமே, 'திரு' என்ற அடைமொழியுடன் குறிப்பிடப்படுகின்றன. அவை திருவோணமும், திருவாதிரையுமே. திருவோணம் திருமாலுக்கு உகந்தது. திருவாதிரை சிவபெருமானுக்கு குறிப்பாக, நடராஜப் பெருமானுக்கே உகந்ததும், உரியதும் ஆகும். சிவபெருமானை 'ஆதிரையான்' என்றே அழைப்பதுண்டு.

மார்கழி திருவாதிரையில் மட்டுமே தில்லை நடராஜரும், மற்றத் திருக்கோயில் நடராஜர்களும் வீதி உலாவாக எழுந்தருளுவார்கள். வேறு நாட்களில் வீதியுலாச் செல்வதில்லை. திருக்கோயில்களில் ஆண்டுப் பெருவிழா நிறைவு நாளில் தீர்த்தவாரிக்கு நடராஜர் தரிசனம் தருவார். அப்போது மூலஸ்தான நடராஜர் எழுந்தருளுவதில்லை. அதற்கெனச் சிறிய நடராஜமூர்த்தம் வைத்திருப்பது வழக்கம். இறைவன் நடராஜராக ஆடிக் கொண்டிருக்கும் சிதம்பரம், கனகசபை அல்லது பொன்னம்பலம் எனப்படும். அதுவே ஆகாயத்தலம் என்றும், விராட் புருஷனின் இதயஸ்தானம் என்றும் போற்றப்படுகிறது. காரைக்கால் அம்மையார் போற்றிப் புகழ்ந்ததும், முக்தி எய்ததுமாகிய வடதிருவாலங்காடு இரத்தின சபை ஆகும். மதுரையில் அவன் ஆடிய சபை இரஜித சபை அல்லது வெள்ளி அம்பலமாகும். திருநெல்வேலியில் இறைவன் தாமிர சபையில் ஆடுகிறான். திருக்குற்றாலத்தில் அவன் ஆடும் சபை சித்திர சபை ஆகும்.

மார்கழி மாதத்தில் பெரும்பாலும் பௌர்ணமியும் திருவாதிரை நட்சத்திரமும் சேர்ந்து வரும். சில ஆண்டுகளில் ஒருநாள் முன் பின்னாக வருவதுண்டு. அதுபோன்ற சமயங்களில் சிதம்பரம் முதலிய தலங்களில் திருவாதிரை நட்சத்திரத்தில் தரிசனம் நடைபெறும். மயிலை போன்ற கடற்கரைத் தலங்களில் பௌர்ணமி நாளில் தரிசனம் நடைபெறும். சிதம்பரம் ஆருத்ரா தரிசன விழா மிகவும் பிரபலமாக உள்ளது.

முற்காலத்தில் திருவாரூரில் திருவாதிரைத் திருவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றதைத் திருநாவுக்கரசர் தேவாரத்தால் அறியலாம். திருவாரூர் சென்று, திருவாதிரை விழாவைக் கண்டு வந்த அப்பர், திருஞானசம்பந்தரிடம் திருவாரூர் ஆதிரைச் சிறப்பை விளக்கி ஒரு பதிகமே பாடினார். அதனைக் கேட்ட திருஞானசம்பந்தர் உடனே திருவாரூருக்குப் புறப்பட்டார் என்று பெரிய புராணத்தால் அறிகிறோம்.

திருப்பல்லாண்டு பாடிய சேந்தனார் பட்டினத்தாரின் கணக்கராக இருந்தவர். விறகு வெட்டிப் பிழைக்க வேண்டிய வறுமை ஏற்பட்டபொழுதும், சேந்தனார்

சிவனடியார்களை உபசரித்து வந்தார். ஒருநாள் சிவபெருமானே சிவனடியார் உருவத்தில் சேந்தனாரின் இல்லத்திற்கு எழுந்தருளினான். சேந்தனார் இல்லத்தில் அரிசி நொய்யினால் செய்த களியைத் திருவமுது செய்தார். பின்னர் சிவபெருமான் சேந்தனார் படைத்த களியை, தனது திருவ யிற்றில் காட்டியருளினார். அன்று முதல், திருவாதிரை நாளில் சிவபெருமானுக்கு களி நிவேதனம் செய்யும் மரபு ஏற்பட்டது. திருவாதிரை நாளில் திருக்கோயில்களிலும் இல்லங்களிலும் களி சமைத்துப் படைத்து மகிழ்கின்றனர்.

## பதஞ்சலி முனிவர்

ஆதிசேஷன் திருமாலுக்குப் பள்ளியாக (படுக்கையாக) விளங்குபவர். திருமாலைத் தாங்குவது அவருக்கு எப்போதும் எளிதாகவே இருக்கும். ஒருநாள் ஆதிசேஷன், திருமாலின் திருமேனி மிகவும் பாரமாக இருப்பதாக உணர்ந்தார். அதன் காரணத்தை அவர் திருமாலிடமே கேட்டார்.

"நான் அண்மையில் சிவபெருமானுடன் தாருகாவனத்திற்குச் சென்று வந்தேன் அல்லவா? அங்கு ஈசன் ஆடிய திருநடனத்தைக் கண்டேன்! அத்திருக்காட்சியால் ஏற்பட்ட மகிழ்ச்சியால் என்னுடைய உள்ளம் பூரித்து உடலும் பருத்து விட்டது!" என்று திருமால் ஆதிசேஷனுக்கு விளக்கினார். "அடியேனும் ஈசனின் திருநடனத்தைக் காண இயலுமோ?" என்று ஆதிசேஷன் பணிவுடன் கேட்டார்.

"சிவபெருமான் இப்போது தில்லையில் ஆனந்தத் தாண்டவம் ஆடுகிறான்! நீ அங்கே சென்றால், ஈசனின் நடனத்தைக் கண்குளிரக் கண்டு திரும்பலாம்!" என்று உரைத்த திருமால் ஆதிசேஷனுக்கு, தில்லைக்குச் சென்று வர அனுமதியும் வழங்கினார்.

மனிதத் தலையும், பாம்பின் உடலும் கொண்டவர்களை, 'மெர்மென்' என்றும், 'மெர்மெய்ட்' என்றும் ஆங்கில இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. அதுபோல், ஆதிசேஷன், ஒற்றை மனிதத் தலையும், பாம்பின் உடலும் கொண்ட குழந்தையாகி, அத்திரி முனிவரின் மனைவியான அநுசூயாதேவியின் கரங் களில் சென்று விழுந்தார். பாம்புருவத்தைக் கண்ட அநுசூயாதேவி, தனது கரங்களை உதறினார். கீழே விழுந்த பாம்புக் குழந்தை, "தாயே! அஞ்ச வேண்டாம்; நான் தங்களின் பிள்ளை; என்னைத் தாங்கள்தான் வளர்க்க வேண்டும்!" என்று கூறியது. அநுசூயா தேவியின் பாதத்தில் அஞ்சலி செய்து விழுந்ததால் அக்குழந்தைக்கு, 'பதஞ்சலி' என்று பெயரிட்டனர். அத்திரி முனிவரின் ஆசிரமத்தில் வளர்ந்த பதஞ்சலியும் புகழ் பெற்ற முனிவரானார். பெற்றோரின் அனுமதி பெற்று, தில்லைக்குப் புறப்பட் டார். ஆனந்தத் தாண்டவத்தைக் கண்டு களித்தார்.

## வியாக்கிரபாதர்

வியாக்கிரபாதர் மத்தியந்தன முனிவரின் குமாரர் ஆவார். இவர் சிவபக்தியில் சிறந் தவர். ஈசனுக்கு உரிய புதிய மலர்களை, அவை நிலத்தில் விழுவதற்கு முன்னால், வண்டுகள் மொய்ப்பதற்கு முன்னால் இரவு நேரத்திலேயே பறித்து வருவார். அதற்காக அவர் மரங்களில் ஏறும்பொழுது, இரவு நேரப் பனியில் கால்கள் வழுக்கிவிடும். இருட்டில் மலர்களும் சரியாகத் தெரியாது. இவற்றைத் தவிர்க்க வியாக்கிரபாதர் ஈசனிடம் கேட்ட வரம் மிகவும் வித்தி யாசமானது! "சிவபெருமானே! உனக்கு உரிய மலர்களை அடியேன் இரவு நேரத் திலேயே எடுத்துவர வேண்டும்; அதற்கேற்ப, பற்றிக் கொள்ளும் இயல்புடைய புலியின் கால்களை எனக்குக் கொடுத்தருள வேண் டும்! அத்துடன் இருட்டிலும் நன்கு தெரியும் கண்களையும் கொடுத்தருள வேண்டும்!" என்று வேண்டினார் வியாக்கிரபாதர்.

சிவபெருமானும் அவர் கேட்ட வரங்களைக் கொடுத்தருளினான். புலியின் கால்களை உடையவர் என்ற பொருளில் அவரை, 'வியாக்கிரபாதர்' என்று அழைத்தனர். புலிக்கால் முனிவர் என்றும் கூறுவர். இவர் பெரும் பற்றுடன் நடராஜப் பெருமானை வழிபட்டதால் தில்லையை, 'பெரும்பற்றப்புலியூர்' என்று அழைத்தனர்.

# வைகுண்ட ஏகாதசி

# (17.12.2010)



படைப்பும், படங்களும்,
எம்.என்.ஸ்ரீனிவாசன்

திருவோண நட்சத்திரமும் திருவாதிரை நட்சத்திரமும் தனிச் சிறப்புடன் கூடிய நட்சத்திரங்களாக "திரு" என்ற ஆரம்ப எழுத்துக்களோடு அமைந்துள்ளது. திருவோணம் திருமாலுக்கும், திருவா திரை சிவபெருமானுக்கும் உரிய நட்சத்திரங் களாகும்.

அதுபோல திருவோண நட்சத்திரத்தில் ஆழ்வார்களில் முதலாழ்வாரான பொய்கை யாழ்வாரும் சிறந்த மஹநீயர்களாக விளங்கிய வேதாந்த தேசிகனும், பிள்ளைலோ காச்சாரியாரும் முறையே புரட்டாசி திருவோண நன்னாளிலும் ஐப்பசி திருவோண நன்னாளிலும் அவதரித்தவர்கள்.

முற்காலத்தில் அந்நியர்களின் ஆட்சியில் அரங்கமா நகருளானுக்கு ஆபத்து ஏற்பட்ட சமயத்தில் அப்பெருமானின் திருவுருவத்தை திருவரங்கத்திலிருந்து எடுத்துச் சென்று பாதுகாத்து பின் சகஜநிலை வந்தவுடன் மீண்டும் அரங்கத்தில் ஆராதிக்கப்பட தங்கள் தள்ளாத வயதிலும் தளராது பாடுபட்டவர்கள், இவர்கள்.

திருவாதிரை நட்சத்திரத்தில் பல நாயன்மார்கள் அவதரித்த தோடல்லாமல் சைவம் வளர பாடுபட்ட, அறுமத நிர்ணயம் (ஷண்மதஸ்தாபிதம்) செய்த ஆதிசங்கரர் அவதரித்த நன்னாளாக திருவாதிரை நட்சத்திரம் விளங்குகின்றது.

அதுபோல மார்கழி மாதமும் சிறப்புடைய மாதமாக சைவ – வைணவ கொள்கைகளுக்கு ஏற்றதாக அமைந்துள்ளது. கிருஷ்ண பகவானும் தனது கீதையிலே மாதங்களில் நான் மார்கழியாய் உள்ளேன் என்று கூறியுள்ளார். மேலும் நாரணனுக்கு உகந்த நன்னாளான வைகுந்த ஏகாதசியும், சிவபெருமானுக்குகந்த ஆருத்ராவும் மார்கழியிலேயே அமைந்து அம்மாதத்திற்கு பெருஞ்சிறப்பைச் சேர்க்கின்றது என்றால் மிகையாகாது.

ஒவ்வொரு மாதமும் வளர்பிறையில் வரும் ஏகாதசி, தேய்பிறையில் வரும் ஏகாதசிகளில் மார்கழி வளர்பிறையில் வரும் ஏகாதசிக்கு வைகுண்ட ஏகாதசி என்ற பெருமை உண்டு. இது பெரிய ஏகாதசி என்றும், முக்கோட்டி ஏகாதசி என்றும் அழைக்கப்படுகிறது. சாதாரணமாக ஏகாதசி விரதமே சிறப்பாக பேசப்படும்போது வைகுண்ட ஏகாதசி விரதமாவது கடைபிடித்தால் நாரணனின் நல்லருள் நமக்கு கிடைக்கும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. வைகுண்ட ஏகாதசி அமைந்த விதத்தையும் அத்திருநாள் திருமால் திருத்தலங்களில் எவ்வாறு கொண்டாடப்படு கிறது என்பதையும் பற்றி சற்று அறிவோமா?

ஒரு சமயம் பிரளயத்தில் மூழ்கிய உலகத்தை மறுபடியும் உண்டாக்க விரும்பிய திருமால் நான்முகனைப் படைத்தார். அந்த நான்முகனை அழிக்க இரண்டு அஸுரர்கள் வந்தார்கள். அவர்களைத் தடுத்த திருமாலிடமே அவர்கள் சண்டைக்கு வந்ததால் திருமால் அவர்களை அழித்தார். நல்லறிவு பெற்ற அவர்கள் திருமாலிடம் நாங்கள் உம் அருளால் சித்தியடைந்து ஸ்ரீவைகுண்டத்தில் வாஸம் செய்ய வேண்டும் என்று வேண்டினர். அவர்களின் வேண்டுகோளை ஏற்ற திருமால் மார்கழி சுக்லபக்ஷ ஏகாதசியன்று விண்ணகரத்தின் வடக்கு நுழைவாயிலைத்

திறந்தார். அதன் வழியாக சத்யலோகத்திற்கு மேலுள்ள பரமபதத்திற்கு அனுப்பினார். அப்போது அந்த அஸுரர்கள் “மார்கழி சுக்ல ஏகாதசியன்று எங்களுக்கு அருளிய சுவர்க்கவாசல் திருநாளைப் பூவுலகில் சிறந்த திருவிழாவாக அனைவரும் அனுஷ்டிக்க வேண்டும். அன்று திருக்கோயில்களில் சுவர்க்கவாசல் வழியே எழுந்தருளும் அர்ச்சா வதாரப் பெருமானை (விக்ரஹம்) தரிசிப்பவர்கள் அனைவரும் மோஷம் பெற வேண்டும் என்று வேண்டிக் கொண்டனர். அதன்படியே நடக்கும் என திருமாலும் அஸுரர்களுக்கு ஆசி வழங்கினார்.



அந்த நன்னாளே வைகுண்ட ஏகாதசித் திருநாளாக திருமால் உறையும் திருத்தலங்களில் விசேஷமாகக் கொண்டாடப்படுகிறது.

வைகுண்ட ஏகாதசிக்கு முன்பாக பகல் பத்து என்றும் வைகுண்ட ஏகாதசி முதல் இராப்பத்து என்றும் இத்திருவிழாவை அழைப்பர். இவ்விழா நாட்களில் பிரதான பெருமான், திருவிழா மண்டபத்தில் பிரதா னமாக எழுந்தருளியிருப்பார். அவரைத் தரிசித்த வண்ணமாக வரிசையாக இரண்டு பக்கங்களிலும் ஆழ்வார்களும் வைணவ (குருமார்களும்) ஆசார்ய பெருமக்களின் திருவுருவங்களும் அமைந்திருப்பர். இது போன்ற காட்சியை இந்த 20 நாட்களில் மட்டுமே தரிசிக்க முடியும். இவ்விழாவில் பெருமானுக்கு விதவிதமான அலங்காரங்கள் அமைக்கப்படும்.

இந்த நாட்களில் தமிழ் வேதமான ஆழ்வார்களின் பாஸுரங்கள் (4000) பகவத் ராமானுசர் அமைத்த முறைப்படி அந்தணர்களால் ஓதப்படும். முதல் பத்து நாட்கள் திருமொழித் திருவிழா என்றும் மற்றைய பத்து நாட்கள் திருவாய்மொழித் திருநாள் என்றும் அழைக்கப்படும். இராப்பத்து திருநாளின் கடைசி நாளில் நம்மாழ்வார் முக்தி அடைவதாகவும் மீண்டும் நம் பொருட்டு அரங்கன் அவரை நமக்குத் திரும்ப அளிப்பதாகவும் ஐதிகம். அன்று ஆழ்வார் கோஷ்டியில் எழுந்தருளியிருக்கும் நம்மாழ்வாரை இரண்டு அர்ச்சகர்கள் கைத்தாங்கலாக எடுத்துச் சென்று பெருமானின் திருவடி அருகில் வைத்து முழுவதுமாக துளசி தளங்களால் மூடிவிடுவார்கள். இது ஆழ்வார் முக்தி அடைந்ததைக் குறிக்கும். பிறகு அர்ச்சகர்கள் பெருமாளிடம் “நம் ஆழ்வாரை உலகின் நன்மை பொருட்டு திரும்ப அளிக்க வேண்டுமென வேண்டுவர். பின் தீபாராதனை நடக்கும். பெருமான் நம்முடைய வேண்டுகோளுக்கு அனுமதித்ததாக அர்த்தம்.

பிறகு துளசி தளங்களால் மூடப்பட்டிருந்த ஆழ்வாரைக் கைத்தாங்கலாக எடுத்துச் சென்று ஆழ்வார்கள் கோஷ்டியில் சேர்த்து வைப் பார்கள். இந்தக் கடைசி நாள் வைபவத்திற்கு ஆழ்வார் திருவடி தொழுதல் வைபவம் என்று பெயர். இவ்வைபவங்களைத் தரிசிப்பவர்கள் பாக்யசாலிகள். கலியுகத்தில் நம்மாழ்வாருக்கு முன்பாக வைகுண்டம் சென்றவர் யாரும் இல்லை யென்பதால் வைகுண்டவாசல் (சுவர்க்கவாசல்) மூடப்பட்டிருப்பதாகவும், பின்பு வைகுண்ட ஏகாதசி நன்னாளான மார்கழி சுக்லபஷ ஏகாதசியன்று அது திறக்கப்படுவதாகவும் ஐதிகம். இந்த வைபவத்தினை முதன் முதலாக திருவரங்கத்தில் திருமங்கையாழ்வார் ஏற்படுத்தினார் என்பர்.

பொதுவாக கார்த்திகையில் திருக்கார்த்திகை / திருப்பாணாழ்வார் அவதார நன்னாளில் திருமால் திருக்கோயில் மூலவருக்கு தைலகாப்பு சமர்ப்பிக்கப்படும்.

அதனால் வைகுண்ட ஏகாதசி வரை மூலவர் தரிசனம் கிடையாது. வைகுண்ட ஏகாதசியன்று மூலவர் சேவை / தரிசனம், உற்சவம் சொர்க்கவாசல் வழியாக எழுந்தருள்வது என்று விசேஷமாக இருக்கும். இவ்வைபவங்களைக் கண்டுகளிக்க இப்போதே தயாராகுங்கள்.

தயாபரனின் அருளைப் பெறுங்கள்.
ஆழ்வார்கள் வாழி
அருளிச்செயல்கள் வாழி.

வைகுண்ட ஏகாதசியன்று அநேகமாக எல்லா திருமால் திருத்தலங்களிலும் சொர்க்கவாசல் சேவை உண்டு என்றபோதிலும் காஞ்சியில் 14 திவ்ய திருக்கோயில்கள் அமைந்திருந்தபோதிலும் எட்டு கைகளுடன் காட்சி தரும் திருஅட்டபுயகரம் என்ற திருக்கோவிலில் மட்டுமே “சொர்க்கவாசல்” தரிசனம் உண்டு. மோட்சம் தரும் ஏழு திருமால் திருத்தலங்களில் காஞ்சியும் ஒன்று என்பதையும் இங்கு நினைவு கொள்ளலாம்.

# வள்ளலார் கண்ட நாவுக்கரசர்

கவிஞர். சீ.சோதி
உதவி ஆணையர் (ஓய்வு)அறநிலையத்துறை

சமண மலர் சிரித்த காலம். சரித்திர ஆய்வாளர்கள் கி.பி. 7–ஆம் நூற்றாண்டு என்று சான்று பகரும் காலம். அக்காலத்தில் தோன்றியவர்தான் மருணீக்கியார் என்னும் திருநாவுக்கரசர்.


பரதேசிகள் ஆண்ட காலம்; படித்தறிந்தோர் கி.பி. 19 ஆம் நூற்றாண்டு என்று பறை சாற்றும் காலம்; சாதிகளும் மதங்களும் சதிராடிய காலம். அக்காலத்தில் திருவவதாரம் செய்தவர்கள்தான் சிதம்பரம் இராமலிங்க அடிகள் என்னும் திருவருட்பிரகாச வள்ளலார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த வள்ளலார் ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த நாவுக்கரசரைத் தம் அகக் கண்ணால் காண்கின்றார்கள். அவர் கண்ட நாவுக்கரசர் ஒருவரே. ஆனாலும் இரண்டு வித தோற்றத்தை வெளிப்படுத்தியுள்ளார்கள். ஒன்று கரையேறிய நாவுக்கரசர்; மற்றொன்று கரையேற்றும் நாவுக்கரசர்.

கரையேறிய நாவுக்கரசர்:

திருவருட்பாவில் தேனினும் இனிக்கும் கனியென அனைத்துப் பாக்களும் தித்திப்பன. அணி இலக்கணங்கள் தாமே முன்வந்து அணி வகுக்கின்றன. எதுகையும் மோனையும் எளிதாய் இதயம் புகுவன. உவமைகள் அனைத்தும் உவகை அளிப்பன. பாடற் பொருளோ தேடற்கரிய சிவத்தை – சுத்த சன்மார்க்கத்தை நாடவைப்பன. இத்தகு இயல்புகள் மெத்தவும் கொண்டிலங்கும் திருவருட்பாவில் நாவுக்கரசரைப் பற்றி எத்தனையோ பாக்கள்! அத்தனையும் முத்துக்கள். அழகு ரத்தினங்கள்.

காலையில் மலரும் கமலம் போன்று இறையவர்தம் 'திருவடிப்புகழ்ச்சி'யைப்



சமணம் மலர் அல்ல சருகு என உணர்ந்த மருணீக்கியார் தமக்கையார்தம் வழிகாட்டலில் சைவத்தைத் தழுவினார். மருணீக்கியார் மனம் மாறியது சமணர்களை வெகுண்டெழச் செய்தது. நம் சமயம் என்ன ஆகுமோ என்று எண்ணி அல்லல்கள் பல அடுக்கடுக்காய் அவர்க்குக் கொடுத்தனர். நீற்றறையில் வைத்து நாவுக்கரசரைத் தீ மூட்டி நிம்மதிப் பெருமூச்சு விட்டனர். ஆனால் நாவுக்கரசர் இறையவர்தம் நல்லருளால் நலமாய் வெளிப்போந்தார்.

"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே"

என்று வெளிப்படுத்தினார். அருமையான அருள் அனுபவ பாடல். அடுத்தது யானையை விட்டு இடற முன்வந்தனர். அவர்களே யானையால் தாக்குண்டனர்; மேலும் நஞ்சூட்ட எண்ணி நஞ்சு கலந்த உணவைப் பரிமாறினர். நமச்சிவாய அருளால் நஞ்சும் அமுதமாகி விட்டது. என்ன செய்தும் இவர்க்கு இடரே இல்லையே என்று நினைத்து கல்லில் பிணைத்து கடலில் விட்டார்கள். அப்போது,

**"சொற்றுணை வேதியன் சோதிவானவன்**
**பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழக்**
**கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்**
**நற்றுணை யாவது நமச்சி வாயவே"**

என்று போற்றி துதித்தார். திருவைந் தெழுத்தை ஓதினார். கல் மிதந்தது. கரையேறினார் நாவுக்கரசர்.

இதனையே, 'திருவருண்முறையீடு' என்னும் பகுதியில்,

**"சீர்தரு நாவுக்கரையரைப் போல் இச் சிறியனுமோர்**
**கார்தரு மாயைச் சமணான் மனக்கருங் கல்லிற் கட்டிப்**
**பார்தரு பாவக் கடலிடை வீழ்ந்திடப் பட்டுழன்றே**
**ஏர்தரு ஐந்தெழுத் தோதுகின்றேன் கரையேற்றரசே"**

என்று வேண்டிடுவார் வள்ளலார்.

'நாவுக்கரசரை சமணர் கல்லிற் கட்டி கடலில் வீழ்த்தினர். அது போல எளியேன் மாயை மனக்கருங்கல்லிற் கட்டி பாவக் கடலில் வீழ்த்தப்பட்டுழன்றேன் கரையேற்றரசே' என்று வேண்டுவார். அவரது வேண்டுகோள் சிவபெருமான் மற்றும் நாவுக்கரசர் திருச்செவிகளில் சேர்ந்தது. வள்ளலாரும் ஐந்தெழுத்தை ஓதியுள்ளார். திருவைந்தெழுத்தை ஓதி இந்த உப்புக் கடலை மட்டுமின்றி பிறவிப் பெருங்கடலையே நீந்தி கரையேறி விட்டார் நாவுக்கரசர்.

**"சொற்றுணை வேதியன் என்னும் பதிகச் சுருதியை நின்**
**பொற்றுணை வார்கழற் கேற்றியப் பொன்னடிப் போதிணையே**
**நற்றுணையாக் கரையேறிய புண்ணிய நாவரசை"** என்று

பாடி மேலும் கரையேறியக் காட்சியைப் பதிய வைப்பார். 'சொற்றுணை'யிற் தொடங்கி புண்ணியா நின் பொன்னடிக்கே



பாடிட விழைகின்றது, வள்ளலார் இதயம். எதிர் வந்து நிற்கின்றது. திருநாவுக்கரசர் தேவாரம். பாடுகின்றார் பாருங்கள்;

**"ஈவரசர் எம்முடைய**
**நாவரசர் சொற்பதிக**
**இசைபரிமளிக்கும்பதம்"'**

ஈசனின் அருட்புகழை இசைத்திடும் போழ்து திருவிளையாடற் புராணம், பெரிய புராணம், திருவா சகம், தேவாரம்–ஏன் பன்னிரு திருமுறைகளும் அவை தம் செம்மை மிகு காட்சிகளும் சாரமும் மின்னிடும் வைரங்களாக மிளிரும். பாட்டுக் கடங்கா தன்றோ பத்தரடிப் புகழ்!

போதுகின்றேன் என்பது வரை குறிப்பால் வள்ளலார் உணர்த்தியுள்ளார்.

கரையேறியக் காட்சியை மீண்டும் 'இங்கிதமாலை'யில் எடுத்துக் காட்டுவார். இரண்டு தோழிகள் இயம்புவதாய் அமைந்த அருட்பாக்கள். தத்துவச் செறிவும் சொற்சுவையும் பொருட்சுவையும் கொண்டு விளங்குவன. அதில்,

**"தனிநான் மறையீர் ஒற்றிநகர்**
**தழைக்க வாழ்வீர் தனிஞான**
**ஒளிநா வரசை ஐந்தெழுத்தால்**
**உவரிகடத்தீனீர் என்றேன்;**
**களிநா வலனை ஈரெழுத்தால்**
**கடலில் வீழ்த்தினேம் என்றே**
**எளியேற்கு உவப்பின் மொழிகின்றார்**
**இதுதான் சேடி என்னேடி"**

என்று தோழிகள் பாடுவதாக அருளிய பாடல்.

"ஒற்றிநகர் தழைத்து வாழவைக்கும் நான்மறைப் பொருளீர்! நாவுக்கரசரை ஐந்தெழுத்தால் கடலிருந்து கடத்தினீர் என்றேன். அவரோ 'கண்' என்ற இரண்டு எழுத்தால் பிறவிக் கடலில் சுந்தரரை வீழ்த்தினோம் என்கிறார். இதுதான் தோழி என்னடி என்பதே பொருள். பெரியபுராணம் பேசும் கரையேறியக் காட்சியும், சுந்தரர் தம் கயிலையில் இருந்த காட்சியும் நினைவுக்கு வந்து நெஞ்சை அள்ளும். சிலர் ஈரெழுத்து என்பதற்கு 'மாயை' என்றும் 'தூது' என்றும் பொருள் சொல்வர்.

'நற்றுணை விளக்கம்' பகுதியில் ஒரு பாடல் வழியாக

"நாவின்மன்னரை கரைதனிற் சேர்த்த நமச்சிவாயம் காண் நாம் பெரும்துணையே"

என்று கரையேறியதை மட்டுமின்றி நமக்குத்துணை, கரையேற துணை 'நமசிவாய' என்பதே என்று வள்ளலார் விளக்குகின்றார். மடல் வற்றினாலும் மணங்குன்றாத மலர்போல கடல் வற்றினாலும் காலத்தால் அழிக்க இயலாது நாவுக்கரசர் கரையேறியக் காட்சியாகும்.

கரையேற்றும் நாவுக்கரசர்:

கரையேறிய நாவுக்கரசர் கனிந்த சிவபெருமானின் கருணையை எண்ணி பல தலங்களுக்கும் சென்று பணிந்தேத்தத் தொடங்கினார். திருவதிகை, திருப்பாதிரிப்புலியூர், திருவெண்ணெய் நல்லூர், ஆமாத்தூர், திருக்கோவிலூர் ஆகிய திருத்தலங்களையெல்லாம் தரிசனம் செய்து கொண்டு பெண்ணாகடம் என்னும் தலத்தை அடைந்தார்.

இறைவனிடம்,

**"பொன்னார் திருவடிக்கு ஒன்று உண்டு**
**விண்ணப்பம் போற்றிசெய்யும்**
**என்னாவி காப்பதற் கிச்சை**
**யுண்டேல் இருங்கூற்றகல**
**மின்னாரும் மூவிலைச் சூலம்**
**என்மேல் பொறி"**

–என்றும்

**"இடபம் பொறித்தென்னை**
**ஏன்று கொள்ளாய்"**

என்றும் பரவித் தொழுதார்.

"என்னைக் காக்க நீ விரும்பினால் எனக்கு மூவிலைச் சூலம் இடபம் முத்திரைகளைப் பொறிப்பாயாக" என்று வேண்டினார். வேண்டிய விண்ணப்பம் ஏற்கப் பெற்று முத்திரைகள் இடப்பெற்றன.

முத்திரை என்பது புற அடையாளம். தாம் இன்ன சமயச் சார்புடையவர் என்று சந்தேகமற, மற்றவர் தெரிந்து கொள்ள உதவும் சாதனம். முத்திரையாக வைணவர்கள் சங்கு சக்கரம் பொறித்துக் கொள்கின்றார்கள்.

நாவுக்கரசர் சைவச் சின்னங்கள் தம்மீதிருக்க வேண்டும் என்று விழைந்திருக்கின்றார்கள். முத்திரையை வேண்டி பெற்றிருக்கின்றார்கள். சமணர்கள் மேலிருக்கும் சீற்றம் குறையவே 'இருங்கூற்றகல' என்று இசைத்திருக்கின்றார்கள்.

மேலும் முத்திரை என்பது பக்குவமுள்ள சீடர்களுக்கு பரமகுருவானவர் பதிப்பதாகும். அது திருவடி தீட்சைக்கு முன்னர் செய்யப்பெறும் வழக்கம் என்ப. மறைமுகம் என்பது வேத

மந்திரமாகும். வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது தான் என்பதறிதல் நன்று. முத்திரை பெற்றவுடன் சிவபெருமான் திருவைந்தெழுத்தைத் தரித்துக்கொண்டு 'நல்லூார்' என்னும் பதியை அடைகின்றார்கள். அவர்களை சிவபெருமான் நல்லூார்க்கு வா என்று அழைத்திருந்தார். உடன் புறப்பட்டுச் சென்றார். அங்கு அவர்களுக்கு திருவடி தீட்சையை சிவபெருமான் செய்தருளினார். மாணாக்கர்க்கு குரு திருவடி தீட்சை செய்வார். ஆனால் திருநாவுக்கரசர்க்கு சிவபெருமானே திருவடி தீட்சை வழங்கி அருளினார். இதனை,

**"நாவொன்றரசர்க்கு நாந்தருவே நல்லூரில்**
**வாவென்று வாய்மலர்ந்த வள்ளல்"**

என்று வள்ளலார் இறைவர் அவர்களை அழைத்ததை, தீட்சை அளித்ததைக் குறிப்பார்கள்.

**"பூவாரடிகள் என்தலைமேல்**
**பொறித்து வைப்பாய்"**

என்று வேண்டியதையும்

**"உன் நினைப்பதனையும் முடிக்கின்றோம்**
**என்றவர்க்கு**
**சென்னிமிசை பாதமலர் சூட்டினார்**
**சிவபெருமான்"**

என்றும் பெரியபுராணம் புரிய வைக்கின்றது.

திருவடி தீட்சைக்குப் பின்னர் அருள் அனுபவத்துடன் சிவ அனுபவம் சேர்ந்து விளங்கலானார். திருநாவுக்கரசர் வேறு, திருவருள்வேறு என்ற நிலை இல்லை. திருவருளே சூழ்ந்து கலந்து ஒன்றாகிவிட்டிருந்தது.

அதனால் அப்பூதி அடிகள் மகனை அரவு தீண்டியதினின்றும் உயிர்ப்பித்து அருளினார்கள். திருமறைக் காட்டில் மறையால் அடைக்கப்பெற்ற திருக் கதவைத் திறந்தார்கள்; திருவீழிமிழலையில் பஞ்சம் போக்க நாளும் இன்னிசை கேட்கும் இச்சையால் இறைவனால் வாசியில்லாத பொற்காசு வழங்கப் பெற் றார்கள். திருவையாறு தலத்தில் 'களிறு வருவன கண்டேன்' என்றும் பின்பு சிவபெருமானே சோறு வழங்கியும் அற்புத நிகழ்வுகள் தொடர்ந்து திருப்புகலூரில் ஐக்கியமானார்கள். திருநாவுக்கரசரை ஆளுடை அரசுகள் மாலையில், திருநாவுக்கரசரைப் போற்றி,

**"விளங்குமணி விளக்கென நால்**
**வேதத்து உச்சி**
**மேவியமெய்ப்பொருளைவுள்ளே**
**விரும்பிவைத்துக்**
**களங்கறு மெய்யன்பரெல்லாம்**
**களிப்ப அன்றோர்**
**கற்றுணையால் கடல் கடந்து**
**கரையிற் போந்து**
**துளங்பெருஞ் சிவநெறியைச்**
**சார்ந்த ஞானத்**
**துணையே நந்துரையே**
**நற்சுகமே என்றும்**
**வளங் கெழும் ஆகமநெறியை**
**வளர்க்க வந்த**
**வள்ளலே நின்னருளை**
**வழங்குவாயே"** என வேண்டுகின்றார்.

இவரது வேண்டுகோள் பலித்துவிட்டது. பயன் தெரிந்துவிட்டது.

**"கடல் கடந்தேன் கரையடைந்தேன்**
**கண்டுகொண்டேன் கோயில்**
**கதவு திறந்திடப்பெற்றேன்**
**காட்சியெலாம் கண்டேன்**
**அடர் கடந்த திருவமுதம் உண்டு**
**அருள்ஒளியால் அனைத்தும்**
**அறிந்து தெளிந்து அறிவுருவா**
**யழியாமை யடைந்தேன்**
**உடல் குளிர்ந்தேன் உயிர்கிளர்ந்தேன்**
**உள்ளமெலாம் தழைத்தேன்**
**உள்ளபடி யுள்ளபொருள்**
**உள்ளவனாய் நிறைந்தேன்**
**இடர் தவிர்க்கும் சித்தியெலாம்**
**என் வசம் ஓங்கினவே**
**இத்தனையும் பொதுநடஞ்செய்**
**யிறைவன் அருட்செயலே"**

இத்திருவருட்பா வழங்கும் செம்பொருளை உணர்வோம். திருநாவுக்கரசர் திருவடி போற்றி! திருவருட் பிரகாச வள்ளலார் திருமலரடி போற்றி! போற்றி!

# சிறந்தது சைவ உணவே

ஒருவருக்கு உண்மையான செல்வம் எது? 'நோயற்ற வாழ்வே – குறைவற்ற செல்வம்' என்பது மூதுரை. வடலூர் வள்ளலார் இறைவனிடம் செய்யும் விண்ணப்பத்தில், "நோயற்ற வாழ்வு நான் வாழ வேண்டும்" என்று பிரார்த்திக்கிறார். அப்படி என்றால் நோய்க்கு மூல காரணங்கள் எவை? இவற்றில் முதலாவது – முக்கியமானது உணவில் கோளாறுகளே. பொருந்தா உணவு, மிதமிஞ்சிய உணவு, மசாலாக்கள் செறிந்த உணவு, நேரமில்லா நேரத்தில் கொள்ளும் உணவு போன்றவை கோளாறுகளில் முக்கியமானவை.. ஏற்கனவே உண்ட உணவு செரிமானித்ததால் பசி எழுந்த பிறகு தூய்மையான உணவை, எளிய உணவை வயதுக்கும் தொழிலுக்கும் ஏற்ப அளவோடு உண்பது நீண்ட ஆயுளுக்கு உத்தி – என்கிறது திருக்குறள்.



அப்படியெனில் தூய உணவு என்றால் என்ன என்ற கேள்வி பிறக்கிறது. இதற்கு, 'புலால் மறுத்தல்' – என்ற அதிகாரத்தில் புலால் உண்ணாமையே என்கிறது குறள். "புலால் என்பது மற்றொரு ஜீவராசியின் புண்ணே" என்பது அற்புத விளக்கம். இதனையே புத்தர் பிரான், "புலால் என்பது தூய்மையானதல்ல. இன்னொரு உடம்பின் புண்ணே" என்று கூறியிருப்பது ஆச்சரியமானதே.

இவற்றையெல்லாம் விட செரிப்பதற்கு கடினமானதும் கொழுப்புச் சத்து மிகுந்ததுமான புலால் உணவு ஆரோக்கிய வாழ்வுக்கு ஏற்றதல்ல. அதைவிட இறைச்சியின் வாடையைத் தணிப்பதற்காக – ஒடுக்குவதற்காக புலால் உணவில் சேர்க்கப்படும் பல வகையான மசாலாப் பண்டங்கள் உடலுக்கு ஊறு விளைவிக்கக்கூடியவை. புலால் உணவில் பழகிவிட்டால் அடுத்து அதன் மசாலா மணத்துக்காகவே அடிமையாகிவிடுவது தவிர்க்க முடியாதது. இப்பொழுது உலகெங்கும் குறிப்பாக மேலை நாடுகளில் சைவ உணவுப் பழக்கங்கள் அதிகரித்து வருகின்றன.

அண்மையில் சென்னைக்கு வந்திருந்த உலக மருத்துவக் கழகத்தின் தலைவர் டாக்டர் நீல்பொர்னார்ட்,. "நீண்ட ஆயுளுக்கு மந்திரம் – சைவ உணவே" என்ற முழக்கத்தை எழுப்பியுள்ளார். "மனிதர்க்கு சிறந்த உணவு, தானியங்களும், காய்கறிகளும், பருப்பு வகைகளும், கீரைகளும், பழங்களுமே, ஆராய்ச்சிகள் மூலம் இந்த உண்மை நிரூபிக்கப்பட்டுள்ளது," என்பதையும் அவர் நினைவுபடுத்தியுள்ளார். இத்தகைய இயற்கை உணவுகள் இரத்த அழுத்தம், புற்றுநோய் இதயநோய், சிறுநீரக நோய்கள், நீரிழிவு போன்றவற்றைத் தடுக்கக்கூடியன என்பதையும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

தற்போது இந்தியாவில் புதிதாக துரித உணவுப் பழக்கம் பரவி வருகிறது; அதிலும் குறிப்பாக அசைவ உணவு வகைகளில்! ஏற்கனவே இந்தியாவில் இதய நோயாளிகள், நீரிழிவு நோயாளிகளின் தொகை பெரிய அளவுக்கு பெருகக்கூடிய அபாயம் குறித்து உலக சுகாதார அமைப்பு எச்சரித்துள்ளது, 'துரித உணவு' என்ற கவர்ச்சியான விளம்பரத்தோடு அசைவ உணவுப் பழக்கம் அதிகரித்து வருவது அந்த ஆபத்துக்கு கட்டியம் கூறுவதுபோல் அமைந்துள்ளது.

நன்றி: தினமணி

செயிரின் தலைப்பிரிந்த காட்சியார் உண்ணார்
உயிரின் தலைப்பிரிந்த ஊன்

குற்றத்திலிருந்து நீங்கிய அறிவை உடையவர், ஓர் உயிரினிடத்திலிருந்து பிரிந்துவந்த உடம்பாகி ஊனை உண்ண மாட்டார்.

– திருக்குறள் (எண்:258)

அதிகாரம்: புலால் மறுத்தல்.

# காசிக்கு இணையான திருவாஞ்சியம் திருக்கோயில்

தொல்லியல் அறிஞர் **கி.ஸ்ரீதரன்**
தொல்லியல் துறை அலுவலர் (ஓய்வு)

**த**மிழ்நாட்டில் வழிபாட்டுச் சிறப்புமிக்க பல திருக்கோயில்கள் உள்ளன. அவற்றுக்கு அன்பர்கள் சென்று வழிபட்டு நலமடைகின்றனர். காசிக்கு இணையான கோயிலாக ஸ்ரீவாஞ்சியம் அருள்மிகு மங்களாம்பிகை உடனாய வாஞ்சிநாதர் திருக்கோயில் விளங்குகிறது.

பாடல் பெற்ற காவிரி தென்கரைத் தலங்களில் திருவாஞ்சியம் தனிச்சிறப்பு பெற்று விளங்குகிறது.

ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வராலும் போற்றப்பட்ட திருத்தலம் இது!

ஞானசம்பந்தர் பெருமான் அருளிய திருப்பதிகங்களில் "திருவாஞ்சிய மேவிய செல்வனார் பாவந் தீர்ப்பர், பழி போக்குவர் தம் அடியார்க்கே, திருவாஞ்சியத்தையர் பாத மடைவார்க் கடையா வருநோய்களே, செறு தீவினை கடிய கூற்றமுங் கண்டகலும்" என்று இறைவனின் சிறப்பைப் போற்றுகின்றார்.

"திருவாஞ்சியத்துறையும் ஒருவனார் அடியாரை ஊழ்வினை நலியவொட்டாரே" என சுந்தரர் போற்றுகின்றார்.

திருநாவுக்கரசர் பெருமான் திருவாஞ்சியம் பற்றிப் பாடுவார்க்குப் பாவமில்லையே எனப் போற்றுகின்றார்.

இத்தலத்து இறைவனை எமன் வழிபட்டு பேறுகள் பெற்றார். கோயில் நுழைவு கோபுரத்திற்கு அருகே இடதுபுறம் எமனுக்கு தனிச் சன்னதி உள்ளது. மாசி மாதத்தில் இறைவன் எமன் வாகனத்தில் வீதியுலா வருவது சிறப்பு. மேலும் இக்கோயிலில் யோகபைரவர் எழுந்தருளியுள்ளார். எனவே இத்திருக்கோயிலுக்கு வந்து வழிபடுபவர்களுக்கு எமன் மற்றும் பைரவ வாதனையில்லை எனச் சிறப்பித்துக் கூறப்படுகிறது.

திருமால் சிவபெருமானை வழிபட்டு தனது தேவியான இலட்சுமி தம்மிடம் வாஞ்சையுடன் இருக்குமாறு வரம் பெற்ற தலமாதலால் திருவாஞ்சியம் எனப்பெயர் பெற்றதாக புராண வரலாறு கூறுகிறது. மேலும் அன்பர்கள் விரும்பும் பொருளை வேண்டுபவர்க்கு உடனே அருளக் கூடியவர். அதனால் வாஞ்சிநாதசுவாமி என அழைக்கப்பட்டார்.

இத்திருத்தலத்திற்கு வாஞ்சியப்பதி, சந்தனவனம், ஜாந்தாரண்யம், பூகைலாசம் என்றுவேறுபெயர்களும்வழங்கப்படுகின்றன. இக்கோயிலின் தல விருட்சமாக சந்தனமரம்



திருக்கோயில் ராஜ கோபுரம்

விளங்குகிறது.

சுயம்புத் திருமேனியாக இறைவன் வாஞ்சிநாதர் என்ற பெயருடனும், அம்பாள் மங்களநாயகி (வாழவந்த நாயகி) என்ற பெயருடனும் கோயில் கொண்டு அருள்பாலிக்கின்றனர்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்று வகையாலும் திருவாஞ்சியம் சிறப்புப் பெற்று விளங்குகிறது.

முக்தி தரும் தலங்களில் முதன்மையாகப் பேசப்படுவது திருவாஞ்சியம் தலமாகும். இதனைக் குருஞானசம்பந்தர் தமது பாடலில் போற்றுகின்றார்:–

**"தில்லைவனம் காசி திருவாரூர் மாயூரம்**
**முல்லைவனம் கூடல் முதுகுன்றம்**
**-நெல்லைகளர்**
**காஞ்சி கழுக்குன்றம் மறைக்காடு**
**அருணை காளத்தி**
**வாஞ்சியம் என முக்தி வரும்."**

இக்கோயில் முதல் திருச்சுற்றில் வெண்ணெய்ப்பிள்ளையார், விநாயகர், சுப்ரமணியர், பஞ்சபூதலிங்கங்கள், ஜேஷ்டா தேவி, சனிபகவான், மகிடமர்த்தினி முதலான சன்னதிகள் உள்ளன. மேலும் காசிக்கு சமமான தலங்களுக்குரிய அகோரேசுவரர், மயூரநாதேசுவரர், மகாலிங்கேசர்–லிங்கத் திருமேனிகள் வழிபாட்டில் உள்ளன.

திருவாரூர் மாவட்டத்தில், கும்பகோணம் –நன்னிலம் சாலையில் அச்சுதமங்கலம் என்ற ஊருக்குத் தெற்கில் 1கி.மீ தொலைவில் இக்கோயில் உள்ளது.

கோயில் திருக்கோபுரத்திற்கு வலப்புறம் தீர்த்தக்குளம் உள்ளது. இதனை 'குப்த கங்கை' என அழைக்கின்றனர். கார்த்திகை மாதம் ஞாயிற்றுக்கிழமைகளில் இத் திருக்குளத்தில் நீராடுவது மிகுந்த சிறப்புடையது. கங்கையில் நீராடிய பலன் கிடைக்கிறது. தீராத நோய் களை தீர்ப்பதுடன், நவக்கிரகங்களால் கிடைக்கக்கூடிய பலன், அஷ்டதிக் பாலகர்களால் கிடைக்கக்கூடிய பலன், நவகன்னிகைகளால் கிடைக்கக்கூடிய பலன் யாவும் கிடைக்கின்றன என தலப்புராண பாடல் கூறுகிறது. இக்குளத்தில் நீராடி இறைவனை வழி பட்டால் கிடைக்கும் பலன்கள் பற்றி சாம்போபுராணம் மற்றும் பிரமாண்ட புராணம் சிறப்பித்துக் கூறுகின்றன. கார்த்திகை மாதம் சிவ அம்சமான முருகப்பெருமான் இத் தீர்த்தக் குளத்திற்கு எழுந்தருளி தீர்த்தவாரி கொள்கிறார்.

பின்னர் வீதியுலா வந்து அருள்பாலிக்கும் வைபவம் நடைபெறுகிறது. காசிக்கு சமமானதாகப் புகழ்பெற்று விளங்கும் திருவாஞ்சியம் திருக்கோயிலுக்குச் சென்று வழிபட்டும், கார்த்திகை மாதம் ஞாயிற்றுக் கிழமைகளில் குப்தகங்கை திருக்குளத்திலும் நீராடி நலம் பெறுவோம்!



குப்த கங்கை தீர்த்தக்குளம்

# மனித வாழ்க்கையும் சிவஸ்தலங்களும்

எஸ். சாயிராமன்
டாக்டர் உ.வே.சாமிநாதையர்
நூல் நிலையம்

சமயமும் வாழ்க்கையும் வேறு வேறல்ல; இதனால்தான் கருவூரில் இருந்து கடவூர் மயானம் வரையுள்ள சிவஸ்தலங்களில் மனித வாழ்க்கையே பொதிந்து கிடக்கிறது. தாயின் கருவாகிய ஊரில் இருந்துதான் மனித வாழ்க்கையே தொடங்குகிறது. 'தோற்றம் உண்டேல் மரணம் உண்டு' என்னும் உண்மையை நினைவுறுத்தும் பொருட்டே கச்சி மயானம், கடவூர் மயானம், நாலூர் மயானம் ஆகிய மயானத்தலங்கள் ஏற்பட்டுள்ளன.

தேவாரம் பெற்ற சிவஸ்தலங்கள் தலமுறைப்படி வகுக்கப்பட்டது போல் மனித வாழ்க்கைத் தல முறைப்படி தொடக்கத் தலமே கருவூர் ஆகும்; முடிவுத் தலமே கடவூர் மயானமாகும். மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் என்பதற்கிணங்க, திருமண வாழ்வைத் திருமணஞ்சேரி தெரிவிக்கிறது. திருமணமான பெண் தாய்மைப்பேறு அடைவதைக் கருவூர் உணர்த்துகிறது. தாயின் கரு நல்ல முறையில் காக்கப்



பெறவேண்டும் என்பதைக் 'கருகாவூர்' காட்டுகிறது; திருக்கருகாவூரில் எழுந்தருளியிருக்கும் அம்பிகையை, கருக்காத்த நாயகி–கர்ப்பரட்சாம்பிகை என்பர்.

உண்டிகொடுத்து உயிர் கொடுக்கும் தலமாகத் 'திருச்சோற்றுத்துறை' திகழ்கிறது. சோற்றுக்கு ஆதாரம் நெல்மணிகள். எனவே நெல் மணிகளைக் குறிப்பிடும் தலங் களாகத் 'திருநெல்வேலி'யையும், திரு நெல்வாயிலையும் கூறலாம். நெற்பயிர் விளையும் வயலினைத் திருப்பழனம் தெரிவிக்கிறது; பழனம்–வயல்; வயலின் பெயருடன் வயலூரும் உண்டு. திருத்தெளிச்சேரியில் இறைவன் இறைவியோடு வயலில் இறங்கி விதைநெல் தெளித்தாராம். இதனை விளக்கும் வகையில் இத்தலத்தில் ஒரே கல்லில் அமைக்கப்பட்ட சிற்பக்கோலம் ஒன்றுண்டு. திருநாட்டியத்தான்குடியில் சுந்தரர் தரிசிக்க வந்தபோது உமாதேவியாரும் சிவபெருமானும் நாற்று நடவு செய்து கொண்டிருந்தனராம்.

பேரூர் ஆலயத்திற்கு முன்புறம் அமைந்துள்ள பட்டி மேடையில் தென்கிழக்கு மூலையில் மேற்கு நோக்கியவாறு சிறு சந்நிதி உள்ளது. இதற்குக் கேதாரீசுவரர் சந்நிதி என்று பெயர் வழங்குகிறது; கேதாரம்–வயல் இதனுள் புடைப்புச் சிற்பமாக உழவன், உழத்தி வடிவில் பார்வதி பரமேஸ்வரர் காட்சியளிக்கின்றனர். இறைவன் மண்வெட்டியுடனும் அம்பிகை நாற்று முடிச்சுடனும் காட்சியளிக்கின்றனர். இதனை ஒத்ததான உலாத்திருமேனி ஒன்றும் உள்ளது. பெருந்திருவிழாவில் அருகில் உள்ள வயலுக்கு இறைவன் சென்று தண்ணீர் பாய்ச்சுவதும் அம்பிகை நாற்று நடுவதுமான ஐதீக விழா நடத்தப்படுகிறது. இதற்கு நடவு உற்சவம் என்று பெயராகும்.

மேலும் தென்மாவட்டங்களில் பார்வதியம்பிகை முளைகளை மடியில் கட்டிக் கொண்டு வயலுக்குச் சென்று நாற்று நடும் ஐதீக விழா நடைபெறுகிறது. இதற்கு 'முளைப்பாரி உற்சவம்' என்று பெயர். திருப்பயற்றூர், திருத்தினை நகர் ஆகிய தானியப் பெயர் பெற்ற தலங்களும் உண்டு.

பால், வெண்ணெய், நெய் ஆகிய உணவுப் பொருட்களைப் பகரும் தலங்களாக முறையே திருப்பாற்றுறை, திருவெண்ணெய்நல்லூர், திருநெய்த்தானம் முதலியவை உள்ளன. மனித வாழ்க்கைக்குத் தேவைப்படும் உணவுப் பொருட்கள் முதலியவற்றை இறைவனது பிரசாதமாகவே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதை இத்தலங்கள் குறிக்கின்றன.உடையின் தேவையை நல்லாடை–நல் ஆடை என்னும் தலம் உறுதிப்படுத்துகிறது.

பொறுமையின் தேவையை ஒருமுறைக்கு இருமுறையாக வலியுறுத்தும் பொருட்டே அகழ்வாரைத் தாங்கும் பொறுமை படைத்த நிலமாகிய 'பிருதுவி'க்குக் காஞ்சிபுரம், திருவாரூர் ஆகிய இருதலங்கள் இருக்கின்றன. திருத்தணிகைத் தலப்பொருளே பொறுமைதான் என்கிறார் மகாகவி பாரதியார். உயிர் வாழ்க்கையின் உன்னத அடையாளமான அன்புக்கும் தலம் உண்டு. அன்பு இல்லமாக அன்பில் ஆலந்துறை அணி செய்கிறது. கல்விச் செல்வத்தை ஏடுகளின் மூலம் காட்டும் அறிவாலயங்களாகத் திருஏடகமும் திருப்பனந்தாளும் திகழ்கின்றன. 'பனந்தாள்' என்பதே பனையேடுகளைக் குறிக்கும் என்று 'தமிழ்த்தாத்தா' தெரிவித்துள்ளார். நிறைசெல்வச் சிறப்புப் பெற்ற திருவாரூரும், திருச்செம்பொன் பள்ளியும் பொருட்செல்வத்தைக் குறிக்கும் தலங்களாகும். மனித வாழ்க்கைக்கும் பயன் மரங்களுக்கும் உள்ள தொடர்பை, 'திருநெல்லிக்கா' போன்ற தலவிருட்சங்களின் பெயர் பெற்றுள்ள தலங்களே உள்ளங்கை நெல்லிக்கனியென உணர்த்துகின்றன. தங்குதல் என்னும் இடப் பொருளோடு காலத்தைக் காட்டும் தலமாகவும் 'வைகல்' காட்சியளிக்கிறது. "வைகலும் எண்ணில் நல்ல கதிக்கு யாதும் ஓர் குறைவிலை" என்கிறார் திருஞானசம்பந்தர்; வைகலும்–நாள்தோறும். முக்கால வடிவமாக இறைவன் எழுந்தருளியிருக்கும் திருத்தலமே திருப்புகலூர்.இதற்குச் சான்றாக "நெருநலையாய் இன்றாகி நாளையாகி" என்னும் தேவாரம் இசைக்கப்படுகிறது.

காலம் காட்டும் தலங்களைக் கண்டோம்.

தேசத்தைக் குறிக்கும் தலமாக "நன்னிலம்" என்பதை நவிலலாம். "நாடாக இருந்தாலும் காடாக இருந்தாலும் பள்ளமாக இருந்தாலும் மேடாக இருந்தாலும் நிலமே நீ மனிதர் நல்லவராக இருப்பதாலேயே நன்னிலம் ஆகிறாய்!" என்று உரைக்கும் புறநானூற்றுப் பாடலின் பொருளை "நன்னிலம்" இரத்தினச் சுருக்கமாகத் தெரிவிக்கிறது. 'காலதேசம்' என்று காலத்தையும் தேசத்தையும் இணைத்தே சொல்லுகிறோம். எனவே கால தத்துவம் தேசதத்துவத்திற்கு ஏற்றவாறு மாறுபடுகிறது என்பதும் விளங்குகிறது. இதனால் குறிப்பிட்ட சிவஸ்தலங்களிலும், திவ்யதேசங்களிலும் வழிபடுவது காலத்தின் கடுந்தாக்கத்தைத் தவிர்க்கவும் உதவுகிறது.

திவ்யதேசம் திவ்ய காலத்தைத் தோற்றுவிக்கும். இங்கே 'திவ்யதேசம்' என்பது மங்களாசாஸனம் பெற்ற வைணவத் திருப்பதிகளை மட்டுமல்ல; சிவஸ்தலங்களைக் குறிப்பதாகவும் கொள்ளலாம். உயிர் வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் நிலம், நீர் முதலிய ஐம்பெரும் பூதங்களுக்கும் காஞ்சிபுரம் முதலிய பஞ்சபூதத் தலங்கள் உண்டு. நாம் அவ்வப்போது வெளியூருக்குச் செல்லுகிறோம். உண்மையில் வெளியூர் என்பதன் பொருள்தான் என்ன? ஆகாசத்தலமாகிய சிதம்பரமே 'வெளி'யூராகும்; வெளி–ஆகாயம். எட்டுவகையாக இறைவன் வீரம் விளைவித்த திருஅதிகை முதலிய அட்டவீரட்டானத் தலங் களும் உண்டு. விளையாட்டைக் குறிக்கும் வகையிலும் அம்பிகை விளையாடிய பந்து அணைநல்லூர் (பந்தணைநல்லூர்) பெயர் பெறுகிறது. இனி மனித வாழ்க் கையின் மாபெருந் தேவையாகிய மனத்திண்மையினை 'சித்தவடம்' என்னும் வைப்புத்தலம் குறிப்பாகத் தெரிவிப்பதைக் காணலாம்; "சித்தமெனும் திண்கயிற்றால் திருப்பாதம் கட்டுவித்த வித்தகனார்" என்னும் திருவாசகச் செய்தியால் "சித்தவடம்" என்னும் அருஞ் சொல்லினுக்கு "சித்தம் எனும் திண்கயிறு" என்று பொருள் கொள்ளலாம். ஆதலின் உறுதியான சித்தத்திற்கு எடுத்துக்காட்டாக அமைந்த தலமே சித்தவடமாகும். எனவே "அஞ்சுவது யாதொன்றும் இல்லை! அஞ்ச வருவதும் இல்லை!" என்னும் அஞ்சாநெஞ்சாக்கம் தரும் திருநாவுக்கரசர் திருப்பாசுரத்தில் "சித்தவடம்" இடம் பெற்றிருப்பது பொருத்தம்தானே!

பரந்த மனம் படைத்தோரிடம் ஒருபோதும் பிணக்கு ஏற்படாது. மணிவாசகரும் "பிணக்கு இலாத பெருந்துறை" எனப் பாடுகிறார். திருப்பெருந்துறைக் கோயிலின் குதிரைச் சுவாமி மண்டபம் என்னும் குதிரை ராவுத்தர் மண்டபத்தில் உள்ள ராவுத்தச் சுவாமிக்கு அருகில் வந்து இன்றும் முஸ்லீம்கள் தொழுகின்றனர். ஆகவே திருப்பெருந்துறையைச் சமரசத் தலமென்றும் கருதலாம்.

பாண்டி நாட்டில் 'திரு ஆடானை' என்னும் திருத்தலம் உள்ளது. இது திருஞானசம்பந்தரால் பாடப்பெற்றதாகும். சாதாரணமாக இருவருக்கு இடையே உள்ள சமுதாய இடைவெளியை 'அஜகஜாந்தரம்' என்று வடமொழியில் வழங்குவர். 'அஜம்' என்றால் 'ஆடு; 'கஜம்' என்றால் யானை; அந்தரம்–இடைவெளி. இத்திருத்தலப் பெயரில், அஜமாகிய 'ஆடு' உள்ளது. கஜமாகிய 'யானை' உள்ளது; ஆனால் அவற்றுக்கு இடையே 'அந்தரம்' ஆகிய இடைவெளிதான் இல்லை. எனவே 'ஆடானை' என்றே ஆயிற்று. ஆதலின் இறைவன் திருச்சந்நிதியில் உயிர்களுக்கு இடையே எந்தவிதமான இடைவெளியும் இல்லை; ஏற்றத்தாழ்வும் இல்லை என்பதை, 'திருஆடானை' என்னும் பாடல் பெற்ற திருத்தலம் மிகவும் குறிப்பாகவும் நயமாகவும் தெரிவிக்கிறது.

எனவே உயிர்க்கூட்டம் அனைத்தும் இறைவன் திருநோக்கில் ஒன்றுதான் என்பதே ஆடும் யானையும் ஆகிய அஃறிணை உயிர்களும் ஒன்றுதான் என்னும் எளிய செய்தியினாலேயே அருமையாகத் தெரிவிக்கப்படுகிறது.

இங்ஙனம் மனித வாழ்க்கையின் பிரதிபலிப்பாகச் சிவஸ்தலங்கள் அமைந்திருப்பதால் 'மனித வாழ்க்கைத் தலமுறை'க்கென்று ஒரு அட்டவணையும் வகுத்துக் கொள்ளலாம்.

# சொல்லக்கேள், ஞானவழி

## தென்னம்பட்டு ஏகாம்பரம்

மானுடத் தேகம் இறைவன் படைத்த உயரிய, ஒப்பற்ற திருமாளிகை. இதனையே 'ஊனுடம்பு ஆலயம்' என்றனர் நம் முன்னோர். இஃது எலும்பு, தசை, நரம்பு, இரத்தம் இவற்றால் கட்டப் பெற்றது. இச்சரீரத்தைச் சரிந்து போகாமல் காத்து வளர்ப்பது நித்தம் நாம் உண்ணும் உணவுதான். ஆம்; இத்தேகம் சோற்றால் நிலைத்திருக்கும் பாண்டம்தான்.

ஆயினும், இத்தேகம் என்றேனும் ஓர்நாள் அழிய இருப்பது. ஆனால், இத்தூலத் தேகத்துக்குள்ளே என்றும் அழியாத ஜீவதேகம் உள்ளது. நாம் பார்க்க தூலமாய் உள்ளது ஊனுடம்பு; சூக்குமமாய் உள்ளது உயிருடம்பு. இத்தூலத் தேகம் வெறும் வாகனந்தான்; உள்ளேயிருக்கும் உயிர்தான் மனிதனை நடத்தும் சாரதி.


இத்தூலத் தேகத்தை நிலைத்து நடமாட வைப்பது உணவுதான். வயிற்றிற்கு இடப்படும் உணவே, ஊனுடலை வளர்க்கிறது. ஊனுடலை வளர்த்து, ஐம்புலனின்பத்தில் மூழ்கித் திளைப்பதுவே மானுட வாழ்வின் இலட்சியமல்ல.

ஆனால், மனிதர்கள் நித்தம் பொழுது புலர்ந்ததும், வயிற்றுப் பாட்டிற்காக பகல் முழுவதும் உழைப்பதும், இரவானதும் புலனின்பத்தில் மூழ்கிப் பின் உறங்குவதுமாகவே இருக்கின்றனர். சிந்தித்துப் பார்க்கையில், விலங்கினம் போலவே, மானுட வாழ்க்கை உண்பதும் உறங்குவதுமாகவே இருக்கிறது.

நம் ஊனுடம்பைக் காட்டிலும், உயிர் மேலானது அல்லவா? ஊனுடம்பை நடமாட வைப்பது உயிர் தானே! ஒரு நூற்றாண்டுக் காலம் உடம்பினுள் குடியேறி, உலகியல் சுகபோகங்களை நுகர வைத்து, இவனை இன்பத்தில் திளைக்க வைக்கிறது.

மாடமாளிகை, கூட கோபுரங்களில் வாழ்வதும், கோடிக்கணக்கில் பொருள் சேர்த்து புலனின்பத்தில் மூழ்கித் திளைப்பதும், மனைவி மக்களோடு ஆடிப்பாடி மகிழ்வதும் எதுவரை? இந்த ஊனுடம்பில் உயிர் உள்ளவரை தானே!

உயிர், உடலை விட்டுப் பிரிந்தால் இவன் எதை அனுபவிப்பான்? எவற்றை இவன் உடன் கொண்டு செல்வான்? இந்த உடல்கூட உயிர்போன பின்னர், பெயரை நீக்கி பிணம் என்பர். அது நாறும் சவமாகிறதே. தூலத்தைக் காட்டிலும் உயிர் மேலானது அல்லவா? எனவே, அந்த இலஞ்சிய உயிரை, கற்பகத் தருவைக் காத்து வளர்க்க வேண்டியது இவன் தலையாய கடமையல்லவா?



இந்த அநித்திய உடலை வளர்க்க இறைவன் நமக்கு வாயைத் தந்து, அதற்கு வேண்டிய உணவை, காய்கனிகளாக ஏராளமாக அறுசுவைகளில் இம்மண்ணில் எங்கும் விளைய வைத்திருக்கிறான்.

அவ்வாறே நம் ஜீவதேக வளர்ச்சிக்காக நமக்குச் செவியைப் படைத்து, ஜீவ உணவான மதி அமுதம் அருந்த வேண்டி, அதை வாரி வழங்குவதற்காக தேவநாட்டுச் செம்மல்களையும், இறைவன் அனுப்பிக் கொண்டே இருக்கிறான்.

இஸ்லாமிய மகான் ஜலாலுத்தின் ரூமி (ரஹ்) அவர்கள் கூறுவது போல் 'இறைவன் மெய்க்குருபிரான் மூலமாக அல்லாமல் வேறு எவர் மூலமாகவும் அருளமுத தேவ உணவை இறக்குவதில்லை.'

**'காக முறவு கலந்துண்ணக்**<br>
**கண்டீர் அகண்டா காரசிவ**<br>
**போகமெனும் பேரின்ப வெள்ளம்**<br>
**பொங்கித் ததும்பிப் பூரணமாய்**<br>
**ஏக உருவாய்க் கிடக்குதையோ**<br>
**இன்புற்றிட நாம் இனிதெடுத்த**<br>
**தேகம் விழுமுன் புசிப்பதற்குச்**<br>
**சேர வாரும் ஜகத்தீரே!'**

– என்று தாயுமானவ சுவாமிகள் கூவியழைப்பது, தூலத் திருமேனியில் எழுந்தருளி நடமாடும் பெரியோர்களை அடுத்து செவுயுணவு அருந்தி, சிவபோகத்தில் திளைக்கவேதான்.

தேவ ஆவியால் நிரம்பப் பெற்ற அத்தகைய பாரவான்கள், தங்களை நாடிச் சரணடைந்த ஜீவர்களுக்கு தேவ ஆவியை ஊட்டி மறுபிறப்பு தந்தருளுகிறார்கள்.

அவர்கள் வழங்கும் அருளமுதம் செவியில் ஏற ஏற, ஜீவர்களின் சித்தத்தில் மனச் சலனம் நீங்கி, நிச்சலனம் குடியேற, பேரின்பப் பெருவெள்ளம் பொங்கித் ததும்பும்.

வானநாட்டுச் செம்மலின் அமுத நாவெனும் லிங்கம். தன்னைச் சார்ந்த சீடனின் யோனியாகிய செவிப்புலனில் அரூபத்தில் போகிக்க, வானநாட்டு வானமிழ்தமாகிய போகம் தேகாதியந்தமும் இனிக்கும். மயிர்க்கால்தோறும் இன்பமூட்டும். ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கும். சுவர்க்க பதிக்கு ஏற்றுவிக்கும். இதுவே சிவபோகம், சிவானுபோகம்.

**'பின்பு உந்தன் செவிதானே**
**யோனியாகப்**
**பேசும் என்றன் நாவுதான்**
**லிங்கமாச்சு**
**இன்பமுடன் அனுபோகத் திருக்க**
**வென்றே**
**இரு செவியில் உபதேசம்**
**ஏற்றுவோமே'**

– என்று சிவானந்த போதம் குறிப்பிடுவதும், இந்த அருள் போகத்தைத் தான்.

நம் ஜீவதேகத்தை வளர்த்து, இளமையாக்கி எழிலூட்டுவது எல்லாம் குருபிரான் திருவாக்கே. ஜீவனிலுள்ள சர்வ மாசுகளை ஒழித்து, பிரகாசிக்க வைப்பதுவும் அவர்கள் அருளமுத வருஷிப்பே.

மனிதனின் ஆயுள் என்பது நாள்கணக்கு அல்ல; அவனவன் செலவிடும் மூச்சைக் கொண்டே அளவிடப் பெறுகிறது.

சாதாரண நிலையில் மூச்சு *12* அங்குலம் வெளியே போக, உள்ளே *8* அங்குலம் தான் திரும்புகிறது. ஆசையூட்டும் பொருளை அவாவுடன் காணும்போது *24* அங்குலம் வெளியேறுகிறது. உறங்கும்போது *48* அங்குலம். போகிக்கும்போது *64* அங்குலம் என வெளியேறுகிறது. ஆயினும், உள்ளே திரும்புவது *8* அங்குலம்தான்.

இங்ஙனம் தன்னறிவு கொண்டு வாழும் வாழ்க்கையில், சாதாரணமாக நல்ல ஒழுக்கமான மனிதன் *21,600* தடவை மூச்சு விடுகிறான். மூச்சு அதிகமாகச் செலவாக, மூச்சாகிய வயது தூண்டப்பட்டுப் போய், சீக்கிரத்தில் மூப்பு வந்து மரணமடைகிறான்.

ஆனால், தன் மூச்சை இவன் அறியாமலேயே வெளியேறாமல் அடக்கி வைக்க உதவுவது, செவியுணவாகிய பாரவான்களின் நாதவொலி அமுதுதான். இவ்வமுதுதான், நாத மருந்தாகி இவனுள்ளே குடியேறியுள்ள ஜீவனை, சவமாக்காமல் சிவமாக்குகிறது.

ஒரு மெய்ஞ்ஞானியின் முன்னிலையில் அமர்ந்து அவர்களது தேவ ஆவியாகிய திருவாக்கினைச் செவிமடுக்க, மூச்சுதானே அடங்குகிறது. செவியுணவே அமிழ்தமாக, இவன் ஆயுள் அதிகமாகிறது.

**'மாசிலான் மறைப்படியும்**
**எண்ணில் கோடி**
**மந்திரங்கள் அனைத்துமொரு**
**மொழிக்குள் வைத்து**
**தேசிகரென் துக்கவுடல்**
**நீக்கி உள்ளே சுகவுடலைக் காட்டிய**
**பொன் னரங்கர் தானும்**
**பேசினார் நாயேனைப்**
**பொருட்டாய் எண்ணி**
**பிஞ்ஞகன்றன் நோக்கினுக்கே**
**என் நோக்கேக**
**வாசிவா சிவாவரவு**
**கண்டேன் கண்டேன்**
**வள்ளல்திரு வடிக்கமலம்**
**வாழ்கஎன் நெஞ்சே!'**

– என்று மெய்வழிச்சாலை ஆண்டவர்கள் அருளிச் செய்தபடி செவியுணவால் வாசியோகம் கைவரவாகிறது.

பெரியோர்களின் திருவாக்குகளைக் கேட்பதுவே தவம், யோகம், முத்தியாகும். என்றும் பொய்யகத் துறைந்துள்ள மனத்தை மெள்ள மெள்ள மெய்யறிவு உதயங் காட்டிக் காட்டி மாற்றி அறிவு மயமாக்குகிறது. ஜீவனுக்கு உஷ்ணத்தையும், வனப்பையும் தருகிறது. அறிவைப் பிரகாசமாக்கி வைக்கிறது. சர்வ ரோகங்களைத் தீர்த்து, சர்வ பாவங்களைச் சங்கரித்து, மரண மிலாப் பெருவாழ்வை அளிக்கிறது.

பெரியோர்களின் அறிவாகார அமுதமே இவனுக்கு ஆறாம் அறிவாகிய பேரறிவைத் தருகிறது. அப்போதுதான் தன்னை அறிகிறான்.

பெரியோர்களின் வார்த்தைகளை, உலக மாந்தர் வார்த்தைகளோடு ஒன்றாக வைத்து நினையாதே. அவர்களே வந்த வேதம். வேதத்தின் தொனி. அவர்கள் நாவில் பிரணவப் பொருள் வீற்றிருக்கிறது.

தம் ஜீவனை அறியாதவர்கள் குருமார்களென்றும், சன்னிதானங்கள் என்றும், சுவாமிகள் என்றும் கூறித் திரிகிறார்கள். அவர்கள் பெரியோர்களல்லர். இவர்களின் பிரசங்கமனைத்தும் தாறுமாறான செவியுணவாகும். இவற்றால் மனமாகிய வயிறு

கோளாறு அடையும். இந்த அநித்திய வார்த்தைகள் நம்மைக் குழப்பத்தில் ஆழ்த்தும்.

குரு பீடத்திலிருந்து பிறக்கும் சொல், மனிதனைத் தேவனாக்கும். ஜீவன் முத்தர் வாக்கெல்லாம் வேதமாகும்; வேதாந்தமாகும். அவர்களின் வாக்கின் வல்லபம் அளவிட முடியாதது. அவர்கள் தங்கள் சுத்த தேவ ஆவியை நம் ஜீவனில் படிய வைத்து ஏழ்நிலைக் கம்பத்தில் ஏற்றி வைக்கிறார்கள். அதுவே மறுபிறப்பு; அது முதல் நாம் தேவனாகிறோம்.

நாவின் சுவையில் கிடந்தால் நாம் மிருகம். செவிச்சுவை நுகர்ந்தால் நாம் தேவனாகிறோம்.

'அழிவுள்ள வித்தினால் அல்ல; என்றென்றைக்கும் நிற்கிறதும், ஜீவனுள்ளதுமான தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் பிறந்திருக்கிறீர்கள்.'

'ஆவியே உயிர்ப்பிக்கிறது. மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது. நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும், ஜீவனாயும் இருக்கிறது.'

'ஒருவன் என் வார்த்தையைக் கொண்டால், அவன் என்றென்றைக்கும் மரணத்தைக் காண்பதில்லை.'

'நான் தரும் தண்ணீரைக் குடிப்பவன், என்றுமே தாகங் கொள்ளான். நான் அவனுக்கு அளிக்கும் ஜீவநீரோ, அவன் முடிவில்லா வாழ்வடைய அவனுக்குள் பொங்கியெழும் ஊற்றாகும்.'

'நான் குறிப்பிடும் உணவை உண்பவன் சாகான். இதற்காகவே இவ்வுணவு வானின்று இறங்கியது. நானே வானினின்று இறங்கி வந்த உயிருள்ள உணவு.'

இவ்வாறெல்லாம் செவியமுதம் குறித்து சத்திய வேதம் கூறுகிறது.

கலைமகள் வாசம் செய்யும் நாவினையுடைய மறைமொழி மாந்தராக விளங்கும் குரு கொண்டல்களே தம் திரு ஆலவாயெனும் உண்ணா முலையில் ஊறும் ஞானப் பாலை, சீடனின் ஜீவப் பசியறிந்து நித்தம் கருணையுடன் ஊட்டி வளர்க்கின்றார்கள். இவர்களே அம்மையப்பராகவும், தாயுமானவராகவும் திகழ்கிறார்கள்.

செவிச் செல்வத்தின் உன்னதம் அளவிடற்கரியது.

'தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்' என்று திருமந்திரமும்,

'மந்திரத்துக்கு மூலம் குருவின் வாக்கியம்' என்று குரு கீதையும் போற்றுகின்றன.

செவியுணவு என்ன பயன் விளைவிக்கும்? ஸ்ரீ அருணந்தி சிவாசாரியார், தங்கள் சிவஞான சித்தியாரில் தொகுத்துரைப்பதைக் கேளுங்கள்.

**"சூரிய காந்தக் கல்லிடத்தே செய்ய**
**சுடர்தோன்றி யிடச்சோதி தோன்றுமாபோல்**
**ஆரியனாம் ஆசான் வந்தருளால்**
**தோன்ற**
**அடிஞானம் ஆன்மாவில் தோன்றும்**
**தோன்றத்**
**தூரியனாம் சிவம்தோன்றும் தானும்**
**தோன்றும்**
**தொல்லுலக மெல்லாம் தன்னுள்ளே**
**தோன்றும்**
**நேரியனாய்ப் பரியனுமாய்**
**உயிர்க்குயிராய் எங்கும்**
**நின்றநிலை எல்லாமும் நிகழ்ந்து**
**தோன்றும்!'**

பாரவான்கள் திருவாய் மலர்ந்து அருளுவதெல்லாம் வாய்மையாகும். அத்தகைய குருக் கொண்டல் வாய்மையைச் செவி மடுத்து அருந்துதலே கேள்வியாகும்.

செவியுணவின் அருமை பெருமை உணர்ந்தே தெய்வப் புலவர் திருவள்ளுவர் 'கேள்வி' எனும் அதிகாரம் படைத்து 10 குறட்பாக்களை அருளியுள்ளார்கள். அவற்றுள் சில:

**செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்**
**செல்வத்துள் எல்லாந் தலை.**

**செவிக்கு உணவில்லாத போழ்து சிறிது**
**வயிற்றுக்கும் ஈயப் படும்.**

**செவியுணவின் கேள்வியுடையார் அவியுணவின்**
**ஆன்றோரோடு ஒப்பர் நிலத்து.**

**கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியால்**
**தோட்கப் படாத செவி.**

**செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்**
**அவியினும் வாழினும் என்?**

எனவே, மனிதனைத் தேவனாக்க வல்ல செவியுணவைப் பருகுவது என்பது ஞான சைதன்ய வார்த்தைகளை உள்ளம் சம்மதிக்க செவிமடுப்பது தான். ஆசாரியார் தன் சப்தமாகிய உயிரைச் செலவிடும்போது, பணிவுடனும் சிரத்தையுடனும் கேட்க வேண்டும்.

'காதுள்ளவன் கேட்கக் கடவன்' என்பதும், 'திரை கடல் ஓடியும் திரவியம் தேடு' என்பதும் செவிச் செல்வம் குறித்ததே.

**செவிச் செல்வம் குறித்து பரக்கக் கூறியதையே, மெய்வழி ஆண்டவர்கள் சுருக்கமாக 'சொல்லக் கேள், ஞான வழி' என்றார்கள்.**

**ஞானத்தை அடையும் வழி எது என்றால் மெய்ஞ் ஞானிகள் சொல்வதைச் செவிமடுத்துக் கேட்பதாகும். அதுவே ஞானம். ஞானம் பெறுவதற்கான மெய்யான எளிய வழியுமாகும்.**



திருவரங்கம், அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயிலில் ரூ.18.5 லட்சம் மதிப்பீட்டில் கட்டப் பெற்ற அன்னதானக் கூடத்தினை, கடந்த 13.11.2010 அன்று மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள் திறந்து வைத்தார்கள். விழாவில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கே.என்.நேரு, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் திரு. என்.செல்வராஜ், திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மேயர் திருமதி. எஸ்.சுஜாதா மற்றும் உள்ளூர் பிரமுகர்கள் திரளாகக் கலந்து கொண்டனர். விழாவிற்கான ஏற்பாடுகளைத் திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் திரு. பெ.கி.தியாகராஜன் உள்ளிட்ட அறங்காவலர்கள், இணை ஆணையர் / செயல் அலுவலர் திரு. சி.ஜெயராமன் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.



சென்னை மயிலாப்பூர் அருள்மிகு மாதவப் பெருமாள் திருக்கோயிலில் ரூ.15 லட்சம் செலவில் புதிய மரத்தேர் செய்யப்பட்டு, கடந்த 02.11.2010 அன்று திருத்தேர் வெள்ளோட்ட விழாவினை மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு. கே.ஆர்.பெரிய கருப்பன் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். விழாவில் சென்னை மண்டல இணை ஆணையர் திரு. பி.வாசுநாதன், சென்னை திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில் துணை ஆணையர் / செயல் அலுவலர் திரு. பொ.ஜெயராமன், சென்னை மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர் திரு. மு.ஜெயராமன், சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் திருவாளர்கள் மயிலை த.வேலு, சு.மங்கள்ராஜ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இத்திருக்கோயிலின் அறங்காவலர் குழுத் தலைவர் திரு. எம்.பி.மருதமுத்து உள்ளிட்ட அறங்காவலர்கள், செயல் அலுவலர் திரு. க.அருட்செல்வன் ஆகியோர் விழா ஏற்பாடுகளைச் சிறப்பாக செய்திருந்தனர்.

பதிவுஎண்: TN/CH(C)/305/09-11/WPP NO. 451/09-11

# அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில்
# திருவரங்கம் - திருச்சிராப்பள்ளி மாவட்டம்

## வைகுந்த ஏகாதசி பெருவிழா



108 திவ்ய தேசங்களில் முதன்மையானதும், பூலோக வைகுண்டம், பெரிய கோவில் என்று அழைக்கப்படுகிற ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயிலில் நடைபெறும் அனைத்து உற்சவங்களுமே சிறப்பு வாய்ந்தவை ஆகும் ஆண்டுதோறும் மார்கழி மாதத்தில் நடைபெறும் திருஅத்யயன உற்சவம் (வைகுண்ட ஏகாதசி, திருமொழி, திருவாய் மொழித் திருநாட்கள்) முக்கியத் திருவிழா ஆகும். பகல் பத்து, இராப்பத்து 'இயற்பா' என்று 21 நாட்கள் நடைபெறும். இந்த உற்சவத்தில் பகல்பத்தின் போது நம்பெருமாள் அர்ச்சுன மண்டபத்திலும், இராப்பத்து திருநாளில் திருமாமணி மண்டபத்திலும் (ஆயிரங்கால் மண்டபம்), எல்லா ஆழ்வார்கள், ஆச்சாரியர்களுடன் எழுந்தருளிச் சேவை சாதிப்பது மிகவும் சிறப்பாகும். பகல் பத்தின் போது திருமொழிப் பாசுரங்களும், இராப்பத்தில் திருவாய்மொழிப் பாசுரங்களும் அபிநயங்களுடன் அரையர்களால் சேவிக்கப்படும், பகல் பத்து திருநாளில், பத்தாம் நாள் நம்பெருமாள் மோகினி அலங்காரத்துடனும், வைகுண்ட ஏகாதசி அன்று நம்பெருமாள் ரத்ன அங்கியுடனும், மூலவர் முத்தங்கியுடனும் சேவை சாதிப்பார்கள். வைகுண்ட ஏகாதசியன்று காலை நம்பெருமாள் பரமபத வாசல் வழியே வந்து திருமாமணி மண்டபத்தில் எழுந்தருளுவார். இராப்பத்து எட்டாம் திருநாளில், நம்பெருமாள் குதிரை வாகனத்தில் எழுந்தருளி வேடுபறி கண்டருளுவார். இராப்பத்துச் சாற்று முறையன்று நடைபெறும் நம்மாழ்வார் மோட்சம் சேவிப்பதற்குக் கண்கொள்ளாக் காட்சியாகும். இந்த உற்சவம் நாலாயிர திவ்யப் பிரபந்தத்திற்கும், ஆழ்வார்களுக்கும் ஏற்றமிகு உற்சவமாகித் திருமங்கையாழ்வார் காலம் தொடங்கி நடைபெற்று வருகின்றது. இந்த உற்சவத்திற்கு அனைவரும் பெருந்திரளாக வந்திருந்து நம்பெருமாளைச் சேவித்து அருள் பெறும்படி

## முக்கிய திருநாட்கள் விபரம்

| | |
|---|---|
| 06.12.2010 | திருநெடுந்தாண்டகம் |
| 16.12.2010 | மோகினி அலங்காரம் |
| 17.12.2010 | வைகுந்த ஏகாதசி சொர்க்கவாசல் திறப்பு: காலை 5.15மணி |
| 07.12.2010 முதல் | |
| 27.12.2010 காலை 10மணி வரை | மூலவர் முத்தங்கி சேவை |
| 23.12.2010 | திருக்கைத்தல சேவை |
| 24.12.2010 | வேடுபறி |
| 27.12.2010 | நம்மாழ்வார் மோட்சம் |

குறிப்பு: 07.12.2010 ம் தேதி முதல் 27.12.2010 காலை 10.00 மணி வரை மூலவர் முத்தங்கி சேவை உண்டு.

சி. ஜெயராமன்,
இணை ஆணையர் / செயல் அலுவலர்

வ. அமுதா, ரா.சீனிவாசன், த. சேகர்
அறங்காவலர்கள்

பெ.கி. தியாகராஜன்
தலைவர், அறங்காவலர் குழு.